உரிமை முழக்கம்

கந்தசாமி, எம்.ஏ.,

உரிமை முழக்கம்

—மாநில சுயாட்சி கொள்கை விளக்கம்—

கந்தசாமி, எம். ஏ.,

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59. பிராட்வே · சென்னை-1.

முதற்பதிப்பு — மே. 1972.
செல்லம் வெளியீடு-1

விலை ரூ. 1-50

காணிக்கை

இந்தித் திணிப்பை எதிர்த்துத் தன்
இன்னுயிர் ஈந்த என் இனிய நண்பன்
மாயவரம் சாரங்கபாணியின்
கமல மலர்ப் பாதங்கட்கு.

அச்சிட்டோர் : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-14.

மு. கருணாநிதி,
முதலமைச்சர்

தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

வாழ்த்துரை

என் அருமை இளந்தோழர் கந்தசாமி இப்போதைய அரசியல் பிரச்சினையாகிய மாநில சுயாட்சி பற்றிய சில விளக்கங்களை இச்சிறு நூலில் அளித்திட முயன்றுள்ளார்.

ஆங்கில மேற்கோள்களுக்குத் தமிழாக்கம் தந்திருக்கலாம். அவசரமாக நூலை வெளிக் கொணர வேண்டும் என்ற துடிப்பே மேலோங்கி நிற்பதால் சிற்சில குறைகளிருப்பினும் அது அவ்வளவு கவனத்துக்குரியதல்ல.

நண்பரது ஆர்வத்தைப் பெரிதும் பாராட்டுகிறேன். அடுத்த பதிப்பினை இன்னும் விரிவாகவும் சிறப்பாகவும் வெளியிடுமாறு கேட்டுக் கொண்டு, செய்துள்ள முயற்சியினைப் பெரிதும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

அன்பன்
மு. கருணாநிதி

இரா. நெடுஞ்செழியன்,
கல்வி-உள்ளாட்சி அமைச்சர்

தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

மதிப்புரை

'ஏன் வேண்டும் மாநில சுயாட்சி' என்ற தலைப்பில், மாநில சுயாட்சியை எதிர்ப்போர் எழுப்பும் வினவும் இருக்கிறது. மாநில சுயாட்சியை ஆதரிப்போர் விடுக்கும் விடையும் இருக்கிறது. வினவை வெல்லக் கூடிய விடையை உரிமை முழக்கம் என்னும் இச்சிறு நூலின் மூலம் அளிப்பதில் தோழர் கந்தசாமி அவர்கள் வெற்றி பெற்றுத் திகழ்கிறார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், நாட்டுப் பிரிவினையைக் கைவிட்ட அப்பொழுதே, மாநிலத் தன்னாட்சி கேட்பது தி. மு. கழகத்தின் கொள்கை முழக்கமாக அமையும் என்று தெளிவுபடுத்தினார்கள். ஒரு நாட்டுக்குத் தனி ஆட்சி கோருவதற்கும், ஒரு மாநிலத்திற்குத் தனி ஆட்சி கோருவதற்கும் வேறுபாடு உண்டு. முன்னது விடுதலை முழக்கம்; பின்னது உரிமை முழக்கம். பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவதற்கு முன்னால் எழுதிய இறுதிக் கட்டுரையில் தமிழ் மாநிலம் தன்னாட்சி யுரிமை பெற வேண்டியதன் இன்றியமையாமையை வற்புறுத்தியுள்ளார்கள். அந்தக் கொள்கையைத்தான் தி. மு. கழகம் உரிமை முழக்கமாகக் கொண்டு பாடுபட்டு வரத் தலைப்பட்டிருக்கிறது.

ஆசிரியர் கந்தசாமி அவர்கள் கூட்டாட்சித் தத்துவம் — இந்தியாவில் கூட்டாட்சியின் வரலாறு — இந்திய ஆட்சி கூட்டாட்சியா? ஒற்றை ஆட்சியா? — மத்திய அரசின் ஆதிக்க உணர்வு — மத்திய அரசின் நிதித்துறை ஆதிக்கம் — மொழித்துறை ஆதிக்கம்— மாநில சுயாட்சிக் கொள்கை விளக்கம்— மாநில சுயாட்சியினால் விளையும் பயன்கள் போன்ற பல தலைப்புகளின் கீழ் நல்ல பல விளக்கங்களைத் தந்துள்ளார். மாநில சுயாட்சி பற்றித் தெரிந்து கொள்ள விரும்பும் அனைவருக்கும் இந்நூல் பெரிதும் பயன் படும்.

சுருங்கச் சொன்னால் ''இந்தியாவைக் காப்பாற்ற என்ன என்ன அதிகாரங்கள்—உரிமைகள்— வசதிகள் வேண்டுமோ அவையெல்லாம் மத்திய அரசிடம் இருக்க வேண்டும்; மாநில மக்களைக் காப்பாற்ற என்ன என்ன அதிகாரங்கள்—உரிமைகள் வசதிகள் வேண்டுமோ அவையெல்லாம்—மாநில அரசிடம் இருக்க வேண்டும்'' என்பதுதான் தி. மு. கழகத்தின் குறிக்கோளாகும்.

மாநில சுயாட்சிக் கொள்கையை எளிய, இனிய தமிழில் தெளிவாக விளக்கிக் காட்டியுள்ள தோழர் கந்தசாமி அவர்களைப் பாராட்டுகிறேன்.

இரா நெடுஞ்செழியன்,

25-4-'72

நாஞ்சில். கி. மனோகரன்,
எம்.ஏ.,எம்.பி.,
நாடாளுமன்றக் குழுத்தலைவர்,
தி.மு.கழகம்.

10, ஆலன்பி சாலை,
புதுடில்லி-1.

அணிந்துரை

"ஏன் வேண்டும் மாநில சுயாட்சி?" எனும் தலைப்பில் அருமை நண்பர் கந்தசாமி அவர்கள் தீட்டிய நூல் ஒன்றை படித்துப் பார்த்தேன். தெளிவும் திட்டவட்டமான கருத்துக்களும், செழுமையான எண்ணங்களும் நூல் நெடுக பரவிக் கிடப்பதை கண்ணுற்றேன்.

சிரமப்பட்டு பல நூல்களைப் படித்து அவைகளினின்று பறித்தெடுத்த மணம் பரப்பிடும் மலர்களை மாலையாகக் கட்டி தமிழ் மக்களுக்கு அளித்திருக்கிறார்.

மாநில சுயாட்சி என்ற தி. மு. கவின் கோரிக்கையைப் பற்றி பரப்பிவிடப்படும் தவறான கருத்துக்களுக்கு பதில் கூறிடும் ஆரம்ப முயற்சி! வாழ்த்துகிறேன்!

பச்சை ரத்தம் பரிமாறி படுகொலைகள் பல நடந்து முடிந்ததற்குப் பிறகு குழிதோண்டி புதைக்கப் பட்ட எலும்புக் கூடுகளை எண்ணிப் பார்த்ததற்குப் பின்னால் சென்று தீர வேண்டிய லட்சிய திருத்தலமாக இந்த மாநில சுயாட்சியைப் பற்றி கருதுவோர் ஒன்றிலே கருத்துக் குருடர்களாக இருக்க வேண்டும். அல்லது எழுத்தறுப்பு கலையில் கைதேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

துணை கண்டத்தின் அரசியல் சட்டம் நாடு துண்டானதற்குப் பிறகு எழுந்துவிட்ட அரசியல் சுவடி. எனவே அந்தச் சட்டத்தை உருவாக்கிய அரசியல் தந்தையர்கள் ஒரு வகை

யான அச்சத்தை இதயத்திலே தேக்கிக் கொண்டு எதிர் காலத்தைக் கணிக்க முயன்றனர். Constitution of India is a product of partition phobia.

அரசியல் சட்டம் அமுலுக்கு வந்து 22 ஆண்டுகள் தாண்டியதற்குப் பிறகு ஏற்பட்டு விட்ட அரசியல் தலைகீழ் மாற்றங்களை கணக்கிலெடுப்பதற்கு டெல்லி தயங்கக்கூடாது. மயங்கக் கூடாது.

எழுந்து விட்ட இந்த கோரிக்கை அலட்சியப்படுத்தப் படுவதற்கோ அல்லது ஆட்டிப் படைக்கப் படுவதற்கோ உரியவை அல்ல என்பதை இந்தியாவை தனக்கென உடமை கொண்டாடும், காலத்தைப் பார்க்க மறுப்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டில் அதன் ஆதிபத்ய உரிமைகள், அவைகளின் மொத்த பாதுகாப்பில் தங்களுக்கே தான் பங்கு என்ற தனிக் கம்பெனி நடத்தும் போக்கை விட்டு விட்டு மாநில மக்களும் ஆட்சிகளும் இந்தத் துறையின் பங்குதாரர்களே என்ற பண்பை பிரதம அமைச்சரும் அவரைச் சூழ்ந்து நிற்போரும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

உலகம் தட்டையல்ல; உருண்டை.

சந்திர மண்டலம் கவிஞர்களின் கற்பனை உலகம் அல்ல! விஞ்ஞானிகளின் துல்லியமான பார்வைகள் பட்டுத் தெறித் பகுதி! விண்வெளி வீரர்கள் தொட்டு மிதித்த பரப்பு!

நிஜ உலகில் இருந்து கொண்டு எதிர்காலத்தைப் பார்க்கின்ற தொலை தூரப் பார்வையை நாடு பெறவேண்டும்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சி மொழி வழி மாநிலங்களைப் பிரித்த அன்றே அவர்களாலே நியாயமாக தூவப்பட்ட விதை இன்றைக்கு முளைவிட்டிருக்கிறது.

எனக்கு நினைவிருக்கிறது, பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள், "விஞ்ஞான நூற்றுண்டிலே வாழுகின்ற நாம் என்றைக்கே, எந்தச் சூழ்நிலையிலேயோ எழுதப் பட்ட கருத்துக்களை நிரந்தரங்களாகக் கருதிவிடக் கூடாது. வாயு வேகத்தில், மனோ வேகத்தில் பறந்து செல்லும் இவ்வுலகத்தின் கருத்துக்கள் வேகமாக முன்னேறுகின்றன.

புதிதாக எழும் சூழ்நிலையின் வெளிச்சத்தில் எண்ணங்கள் பரிசீலனைக்குரிய பொருளாக ஆக்கப்பட வேண்டும்."

விடாப்பிடியாக மார்க்ஸ் அவர்கள் தீட்டிய டாஸ் கேபிடல் என்ற புத்தகத்தை முடிந்த முடிவு என்று கம்யூனிஸ்ட் நண்கள் சொல்லிக் கொண்டிருந்த காலத்தில் நேரு இந்தக் கருத்தை எடுத்து வைத்தார்.

மனித எண்ணங்கள் விஞ்ஞான ரீதியானவை. அது தேங்கிய குட்டையல்ல. ஓடிக் கொண்டிருக்கும் வற்றுத ஜீவநதி. இந்த கருத்தை நாம் கிளப்பும் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்க மறுக்கும் பெரிய இடத்துப் பிள்ளைகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேம்.

நண்பர் கந்தசாமி மாநில சுயாட்சி கோரிக்கைக்கு எதிராக கிளப்பப்படும் அனைத்து எதிர்ப்புகளையும் அதர்குரிய கோணங்கள் வழியாக சந்திக்கிருர். இந்த நூலை நம்மை எதிர்ப்போரும் நமது கருத்தை ஆதரிப்போரும் படித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆற்றெழுக்கு போன்ற நடை, உட்கார்ந்து சிந்திக்க தூண்டும் அமைதியான எண்ணக் கோர்வைகள். புது முயற்சி யெனினும் காலத்திற்கு தேவையான நன் முயற்சி. அவரது பணி தொடர என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கி. மனோகரன்,

1—5—72.

எழுதியோன் இதயம் பேசுகிறது!

எரிதழல் கொண்டு எரித்தாலும், இதயத்தைப் பிளந்தாலும், ஏற்றதொரு கொள்கையினை எடுத்துக் கூறுதலில் தி. மு. கழகத்தின் இளஞ்சிங்கங்கள் என்றும் அஞ்சியதில்லை. அடக்குமுறைக் கொடுமைகட்கும், அதிகார வர்க்கத்தினரின் அடாத செயலுக்கும் பணிந்ததில்லை.

உரிமைகளை உரத்த குரலில் முழங்குவதில் என்றும் பின்வாங்கியதில்லை.

மாநில சுயாட்சி—உரிமைப் போர்! உரியது வேண்டும்; எங்கள் உணர்ச்சி மதிக்கப்பட வேண்டும் என்ற உரிமை முழக்கம்!

மாநில சுயாட்சி—பிரிவினைப் போர் அல்ல! தன்னாட்சி தானே தவிர தனி ஆட்சி அல்ல! சுயாட்சிதான், சுதந்திர ஆட்சி அல்ல!

மக்கள் தம் வறுமைத் தளையினை அகற்றிட மாநில அரசுகளும், மத்திய அரசும் இணைந்து சம உரிமையோடு செயல்படல் வேண்டும்! நத்திக்கிடக்காமல், நண்பனைப் போன்று இருந்திடல் வேண்டும்.

"I am of the opinion that the centre and the states are not subordinate to one another but coordinate with each other—the states want to be united but not in unitary form"—இது மத்திய மாநில உறவுகளில் நான் கொண்டுள்ள முடிபாகக் கருதுகிறேன்!

இப்படி மாநில சுயாட்சி பற்றிய கருத்துக்களை 'உரிமை முழக்கம்' என்ற எனது நூலில் விளக்கிட முயன்றுள்ளேன். என் முயற்சி இன்னும் முழுமை யாக முடிந்து விட்டதாகக் கருதவில்லை. விரைவில் இன்னும் தெளிவாகவும், விளக்கமாகவும் எழுதுவேன்.

முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எனக்கிட் டுள்ள கட்டளையை கடமையாகக் கொண்டு விரைந்து முடிப்பேன்.

என் எழுத்து வளம் இன்னும் சிறந்தோங்க என்னை வாழ்த்தியருளிய முதல்வர் அண்ணன் கலைஞர். அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றி யினை அவர் திருவடி மலர்களில் குவிக்கின்றேன்!

எனது நூலுக்கு மதிப்புரை வழங்கிய, என் உள் ளத்தில் நிறைந்துள்ள அன்பின் சிகரம், பண்பின் திருவுருவம் அருமை அண்ணன் டாக்டர். நாவலர் அவர்கட்கு என் நன்றியும், வணக்கமும் உரித்தாகுக!

பொன்மனச் செம்மல், புரட்சி நடிகர் கழகப் பொருளாளர் எம். ஜி. ஆர். அவர்கட்கு என் உள மார்ந்த வணக்கங்கள்! ஈந்து சிவந்த கரங்களின் பெரு மையை எண்ணி, எண்ணி நன்றிப் பெருக்கால் உள்ளம் விம்முகின்றேன்!

'அரசியல் எரிமலை' அருமை அண்ணன் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள், சிங்கங்களை குகையிலேயே சந்தித்து வருபவர்!

அலைமோதும் அரசியல் கடலில் அவர் ஆழ்ந் தெடுத்த முத்து! புது டில்லியில் தி. மு. கழகத்தின் சொத்து! அவர் தம் வீட்டில் அவர் எனக்களித்த தேநீர் மட்டுமல்ல—தீஞ்சுவைக் கருத்துக்களும் இன்னும் இனிக்கின்றன!

அணிந்துரையாக அவர் அளித்துள்ள கருத்து மணிகளை என் கண்ணின் மணியாகப் போற்று கின்றேன்! நன்றிக்கடன் பட்டுவிட்டேன்!

இன்னும் பலருக்கு நான் நன்றி நவிலக் கடமைப் பட்டவன்! அவர்களில் அருமை அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் முதன்மையானவர்! அவர் எனக்களித்த ஊக்கமும், உற்சாகமும் இல்லா விட்டால்—நான் இப்படி ஓர் முயற்சிக்குத் துணிந்தே இருக்க மாட்டேன்.

தனக் கென்று எதையும் தேடாமல் எல்லாம் கழகம் என்று வாழ்ந்து வரும் அருமை அண்ணன் எல். கணேசன் எம். எல். ஏ அவர்களுக்கு என்றும் என் உள்ளத்தில் ஓர் உயர்ந்த இடம் உண்டு.

என் வளர்ச்சியில் என்னை விட அக்கறை கொண்டுள்ள அருமை அண்ணன் துரை முருகன் எம். எல். ஏ. என் இதயத்தோடு கலந்து விட்டவர்!

இப்படிச் சிலர்—என் வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் உதவிகள் புரிந்து வருகின்றனர்! இவர்களுக்காக வேனும் இன்னும் நான் வாழ விரும்புகின்றேன்.

இந் நூலை அச்சிட்டு உதவிய திரு. நாரா. நாச்சியப்பன் அவர்கட்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவண்,

கந்தசாமி, எம். ஏ.

1—5—72

திருத்தங்கள்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
42	7	சார்புள்ள	சார்பற்ற
8	இறுதி	தனிரசு	தனியரசு
11	10	ராஜ்யசபை	நாடாளு மன்றம்
11	12	,,	,,
11	14	,,	,,
10	4	Then	Than

ஏன் வேண்டும்

மாநில சுயாட்சி?

'வெற்றி, வெற்றி'- என்ன கூக்குரல் இது? எதில் வெற்றி? எங்கே வெற்றி? எங்கோ இப்படி ஓர் குரல் எழுகிறதே! ஓ... இங்கேதானு...உள்ளத்தின் அடித்தளத்தில்...உணர்வின் ஓட்டத்தில்! ஆமாம்...அப்படி என்ன வெற்றி? திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாநில சுயாட்சிப் போரிலே வெற்றி! இதுதானு...இதற்குப் போய்த்தானு இப்படிக் கூக்குரல் இடுவது! என்றைக்குத் தி.மு.க இதில் தலையிட்டதோ அன்றே வெற்றிக்கனி பழுக்க ஆரம்பித்து விட்டதே!

சரி, மாநில சுயாட்.சியா?-அதில் தி. மு. க. வெற்றி பெற்று விட்டதா?—சற்று புரியும் படியாகத்தான் கூறேன்...! இது-நான் என் மனத்தைக் கேட்ட கேள்வி!

உள்ளத்தில் சிந்தனை ஊற்று பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்து விட்டது! விளைவு? இந்தச் சிறு நூல்!

இருபதாம் நூற்ருண்டின் இணையற்ற வரலாற்று நாயகன் கலைஞரின் கருத்துக்களுக்கு விளக்க மளிக்க முயன்ற முயற்சி! வெற்றிகிட்டுமானுல் அண்ணனின் பொன் மலர்ப்பாதங்களுக்குக் காணிக்கையாக்குவேன்! தோல்வி ஏற்பட்டால்—துவள மாட்டேன்! ஏனெனில்—நான் கலைஞரின் தம்பி! தோல்வியினை வெற்றியின் படியாக ஆக்கிக் கொள்ளத் தெரியும்! ஆயிரம் பழிகளை ஏற்றுக் கொண்டு அஞ்சாது பணி புரியும் ஆற்றல் மறவனின் அருமைத் தம்பியருள் ஒருவன்!

மாநில சுயாட்சி ஏன்? ஏனிந்தக் கேள்வி இன்று எழுந்துள்ளது? ஏதோ வேலையற்ற அரசியல் வாதிகளுக்கு வீண் கூச்சல் போட ஒரு வாய்ப்பாகவா? அல்ல! அல்ல! உரிமைப்போர்! உரியது வேண்டும்! அதன் மூலம் நாட்டு மக்கள் தம் வாழ்வின் வளத்தை உயர்த்திடல் வேண்டும்! ஆதிக்க உணர்வு அங்கே வேண்டாம்! அடிமைத் தளையும் இங்கே இனிப் பூண மாட்டோம்! ஆட்சி எங்கள் கையில்! ஆனல் அதிகாரம் குவிந்திருப்பதெல்லாம் உங்கள் கையில்! எப்படி நிறைவேற்றிடுவோம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை? நியாயமான கேள்விதானே! மத்திய அரசினை மாநில அரசுகள் கேட்க வேண்டிய கேள்விதானே!

அதிகாரங்களைக் குவித்துக் கொண்டு அங்கொன்றும், இங்கொன்றுமாக எங்களுக்குக் கண் திறந்து காட்டுகிறீர்களே, மத்திய அரசினரே! என்ன நியாயமிது? எங்களுக்குத் தர வேண்டியதைத் தந்து விடுங்கள்! அல்லது கேட்டுப் பெறுவதை மறந்து விடுவோம்!

என்ன அதிகாரங்கள் வேண்டும்? இன்னும் என்னதான் வேண்டும்?—சீற்றம் வேண்டாம், மத்திய அரசினரே சிந்தையைச் சற்றுத் தெளிய விடுங்கள்! புரிந்து விடும்!

எதற்கெடுத்தாலும் உங்களையே நாடிக்கொண்டிருக்காமல் எங்களால் முடிந்ததை மக்களுக்குச் செய்ய எங்களுக்கு உரிமையும் அதிகாரமும் வேண்டாமா? அப்படிச்சில உரிமைகள் தானே வேண்டுகிறோம். மக்களுக்குத் தொண்டு செய்யும் மக்களின் பிரதிநிதிகளை அடக்கப் பார்க்கிறீர்களே?

நீ என்ன தான் கேட்கிறாய்? அப்படிக் கேளும் மத்திய அரசே! இந்தியக் கூட்டாட்சியின் அரசியல் சட்டத்தில் சட்டமியற்றும் பகுதிகள் இருக்கிறதே! அதில் உள்ள சில குறைகளைக் களைந்து—மத்திய அரசுக் கென்றே குவிந்துள்ள அந்த அதிகாரக் குவியலைச் சற்றுப் பரவலாக்க வேண்டும்! அதில் மாநிலங்களுக்கு உரிய பங்கினைத் தந்திடல் வேண்டும்! அப்

பொழுதுதான் இந்தியக் கூட்டாட்சியில் கூட்டாட்சியின் பண்புகள் ஓங்கும்! இந்தியா சிதறுண்டு போகாமல், மாநில உறுப்புக்கள் வலிமையோடு, ஒற்றுமையாகத் திகழும். உறுப்புக்கள் வலிமையோடு இருந்தால் தானே—உடல் வலிமை உள்ளதாகக் கருதப்படும்!

இது மட்டுமா? இன்னும் பல காரணங்கள் உள்ளன மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு! என்னென்ன அவைகள்! மத்திய அரசு மாநில அரசுகள் மீது கொண்டுள்ள பொருளாதார ஆதிக்கத்தைப் போக்க வேண்டும்! அரசியல் ஆதிக்கத்தை அகற்றி அண்ணன், தம்பி போல் மத்திய அரசும் மாநில அரசுகளும் நாட்டின் குடும்பத்தில் விளங்க வேண்டும்! எஜமானன், வேலைக்காரன் போல என்றும் இருக்கக் கூடாது! இன்னொன்று? மொழி ஆதிக்க உணர்வு மத்திய அரசுக்கு இருக்கக் கூடாது. இந்திதான் இந்தியாவின் ஆற்றல் வாய்ந்த மொழி! அரசாங்க மொழி என்றெல்லாம் உயர்த்தி, ஏனைய மாநில மொழிகளைப் புறக்கணிக்கக் கூடாது.

இவைகளைப் போக்கத்தான் வேண்டும் மாநில சுயாட்சி! உண்மையான கூட்டாட்சிப் பண்பு இந்தியக் குடியரசில் திகழ்வதற்குத்தான் மாநில சுயாட்சிக் கோரிக்கை எழுந்துள்ளது! அரசியல் கூக்குரலா? அல்ல! அரசியல் சட்டத்திருத்தப் பிரச்சினை! பிரிவினை! ஐயோ! இல்லவே இல்லை! மாநில சுயாட்சிக்கும், பிரிவினைக்கும் உள்ள சம்பந்தம் அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் உள்ள சம்பந்தத்தைப் போன்றது! மாநில சுயாட்சி பிரிவினையை ஏற்படுத்தும் என்று கூறுவது? மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்றது! இந்தியாவின் ஒருமைப் பாட்டுக்கு மாநில சுயாட்சி உரமிடும் அரும்வழி! இத்தகு செம்மையான காரணங்களுக்காகத் தான் மாநில சுயாட்சி வேண்டும் என்பது. மாநில சுயாட்சியின் மாண்புகள், கொள்கை விளக்கங்கள் பற்றி இனிச் சற்றுவிளக்குவோம். புதிய பாதை! கரடு, முரடான காரிருள் பாதை! விளக்கோ ஒளி சிறிதளவே கொண்டது! ஆனால்-ஏந்தியவனின் கரங்கள் நடுங்காமல் பிடித்துக் கொண்டுள்ளன!

இருபதாம் நூற்றுண்டு—ஒரு தொடக்கத்தின் முடிவு! இன்னெரு முடிவின் ஆரம்பம்! அதில்,

இந்தியத்துணைக் கண்டத்தின் நிலை—தூக்கம் கலைந்த நிலை—ஆனல்-தூங்கி எழாத நிலை-இன்னும் இருள் விலகாத இடைக்காலம் உதயசூரியனின் உதயத்திற்காகக் காத்துக்கிடக்கிறது! கருமை நிறைந்த விடியற்காலம் தான் ஒளி நிறைந்த உதயகாலத்திற்கு முன்னேடி காலப்பகைவன் இக்கண்டத்தைச் சில நூற்றுண்டுகளாக வஞ்சித்திருந்தான்! ஆனல்-அதற்கு ஒரு முடிவு கட்ட, கலைஞர் உதித்து விட்டார்! இந்திய அரசியல் 'இந்திரா அரசியலாக,' இந்திய அரசியல் சட்டம் 'இந்திரா அரசியல் சட்டமாக' எதேச்சாதிகாரம் எழுச்சி பெறும் நாளில்-கலைஞர் எழுந்து விட்டார்!

மாநிலங்களின் முதல்வர்களெல்லாம் 'மந்தைகளாக' மாற்றம் செய்யப்பட்டு வருகின்ற நாளில்—மங்காத புகழுடன் ஒளி வீசித் திகழ 'மாநில சுயாட்சிக் கோரிக்கை' எழுந்துள்ளது.

எழுந்ததுடன் நில்லாமல்—வளர்ந்து வருகிறது! இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் இன்று எழுச்சியோடு நிமிர்ந்து நிற்கிறது! இது இந்தியத் துணைக்கண்ட அரசியல் வரலாற்றில் ஒரு புதிய திருப்புமுனை! இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்தின் உண்மையை உரசிப் பார்க்கும் உரைகல் மாநில சுயாட்சிக் கோரிக்கை! கூட்டாட்சித் தத்துவம்—இந்திய அரசியல் சட்டத்தில் செயல் பட்டு வரும் தன்மை எவ்வாறு உள்ளது?

கூட்டாட்சி என்றால் என்ன?—முதலில் இதைக் கண்டபின் மற்றவையும் விளக்கப்படும்!

கூட்டாட்சித் தத்துவம்

மனிதன் சேர்ந்து வாழுகின்ற தன்மையை இயல்பிலேயே பெற்றுள்ளான். தனிப்பட்ட வாழ்வில் மிருக எண்ணங்களைக் கொண்டு வாழ்கின்ற மனிதன், ஒரு பொதுவான சமுதாய

மனிதனுக மற்ற மனிதர்களுடன் சேர்ந்து, கலந்து வாழும் போது தான் பண்பாட்டோடு கூடிய வாழ்வினைப் பெறுகிறுன். இயற்கையின் ஆற்றல்களைக் கண்டு பயப்பட்ட மனித சமுதாயம்—தங்கள் பயத்தைப் போக்கிக் கொண்டு பாது காப்பாக வாழ—ஒரு குழுவாக வாழ ஆரம்பிக்கின்றனர். இந் நிலையில் அச்சமுதாயத்தின் போக்கினைக் கட்டுப்படுத்தவும், ஒழுங்கு படுத்தவும் ஒரு ''தலைமை'' அவசியமாகிறது. அவ் வாறு ஒரு தலைமையோடு இயங்குகின்ற சமுதாயத்திற்குச் சில சட்டதிட்டங்கள் தேவையாகின்றன. இவைகளே பின்பு ஓர் ஒழுங்கான சமுதாய அமைப்பாக மலருகின்றன. எனவே, சமுதாய அமைப்பு அல்லது அரசியல் சமூகமானது ஒரு குறிப் பிட்ட எல்லைக்குள், வரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்களுடன் செயல்படும் நிலையில் ''நாடு'' என்று அழைக்கப் படுகிறது. நாடு என்ற அமைப்பை நிறுவி, ஒழுங்கான சட்டங்களைக் கொண்டு ஆளுகின்ற தன்மையை ''அரசு'' என்று கூறலாம். ஆதியில் மனிதன் ஒரு கூட்டமாக அலைந்து திரிந்து கொண்டு இருந்தபோது, ஒரு குறிப்பிட்ட வரையறை அமைந்த நாடு இல்லை. ஆனுல் அவர்களைக் கட்டுப்படுத்த ஒரு தலைமையும், அதன் கீழ் ஓர் அரசியல் அமைப்பும் இருந்தன. எனவே, அரசாங்கம் நாட்டை விட முன் தோன்றியது எனலாம். (''The Government is older than the state''—C.P. Patterson—American Government.)

அரசும், நாடும் எங்கும் ஒரே நிலையில் அமையவில்லை காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் பல்வேறு அமைப்பு களாக உருப்பெற்றன. முடியாட்சி, குடியாட்சி போன்று பல வகைகளாக அமைந்த அரசு அமைப்பு முறைதான் மனித சமுதாயம் தோன்றியதிலிருந்து இன்று வரை உள்ளது. இன்றைக்கு நாம் காணுகின்ற அரசியல் அமைப்புக்களில் குறிப்பிடத்தக்க அமைப்பாக கூட்டாட்சி இயல் (Federal set up) உள்ளது. பல்வேறு நாடுகள் இந்த அமைப்பிலேயே அமைந்துள்ளன தனித்தனி இயல்புகளோடு அமைந்த பல சிறு நாடுகள் கூட்டாகச் சேர்ந்து, தங்களுக்குள் பொதுவாகச்

சில லட்சியங்களையும், குறிக்கோள்களையும் அடைய, ஒரு பொது நல அரசை அமைத்துக் கொள்வது தான் கூட்டாட்சி என்று அழைக்கப் படுகிறது. (A federal state is one in which a number of co-ordinatie states unite for certain common purposess—Prof Strong).

இக் கூட்டாட்சி அமைப்பினை இரட்டை ஆட்சி (dual Government) எனவும், கூட்டமைப்பு (Composite state) எனவும், பல்லாட்சி (Multiple Governnrent) எனவும் அழைப்பர். கூட்டாட்சி என்ற பொருள் தரும் ஆங்கிலச் சொல்லான 'Federal' - 'Foedin' என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது. இந்த இலத்தீன் மொழிச் சொல்லை 'ஒப்பந்தம்' எனத் தமிழில் கூறலாம். ஆக, பல சிறு அரசுகள் ஒன்றிணைந்து செயல்படுகின்ற அமைப்பைக் கூட்டாட்சி எனலாம்.

இந்தியாவில் கூட்டாட்சியின் வரலாறு

கூட்டாட்சித் தத்துவம் இந்தியக் குடியரசில் எப்படி இடம் பெற்றது?—வெள்ளையர்கள் ஆண்டகாலத்தின் சில வரலாற்றுப் படிகளைப் புரட்டிப் பார்த்தால் இதற்கு விடை காணலாம் இந்தியக் கூட்டாட்சிக் குமரன் கருக் கொண்ட நாளிலிருந்து பின் குழந்தையாக உருக் கொண்டு கடந்து வந்திருக்கும் காலத்தைத் திரும்பிப் பார்க்கவேண்டும்! அப்பொழுது தான் அது சுகப் பிரசவமா? அல்லது பல மருத்துவச்சிகளுக்கு பல விதமாகத் தொல்லை கொடுத்துப் பிறந்த பிறப்பா?—என்பது புரியும்!

இந்திய உபகண்டம் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் 'காலனி' நாடாக இருந்த பொழுது—"—இங்கிலாந்தை ஆண்டவர்கள் எத்தகு அரசியல் அமைப்பினை இந்தியாவில் ஏற்படுத்த வேண்டும் என்பதனை முதலில் தீர்மானிக்க முனைந்தனர். இந்தியாவில் ஏற்படுகின்ற அரசில் ஆங்கிலேயர் செல்வாக்கு நிலைத்திருக்க

வேண்டுமென்பதே அவர்களது இறுதித் தீர்மானம். ஆங்கில அரசு 1917-ம் ஆண்டு ஆகஸ்டு 17-ல் கூட்டாட்சி (Federal) அமைப்பாக, ஒரு பொறுப்பான 'பிரிட்டிஷ் இந்தியா'வை நிர்மாணிக்கத் தலைப்பட்டது.

முதல் 'வட்ட மேசை மாநாடு' (Round Table Conter-ence) பிரிட்டிஷ் இந்தியாவுக்கும், இந்திய மாநிலங்களுக்கு மிடையே ஒரு கூட்டாட்சியை இந்தியாவில் நிறுவத் தீர்மானித்தது. 1935-ம் வருட இந்தியச் சட்டம் (India Rule) இதற்கான விதிகளை வகுத்தாலும், செயல் வடிவில் உருப் பெற வில்லை.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் 'கிரிப்ஸ் மிஷன்' (Cripps Mission) கூட்டாட்சி அமைப்புக்கு ஏற்பாடு செய்ய முனைந்தது. அமைச்சரவைத் தூதுக்குழு (Cabinet mission plan) கூட்டாட்சி அமைப்பிலிருந்து விலகி, "மூவராட்சி" (Triarchy)—யைப் போன்று அரசாங்க அதிகாரங்கள் அனைத்தும் மூன்று பகுதிகளாக (ஒரு மத்திய அரசு, மூன்று பகுதி அரசுகள், பலநூறு மண்டல அரசுகள்) இருக்க வேண்டுமென என்றும் நிறைவேறாத, ஒரு யோசனையைத் தெரிவித்தது.

ஆனால், அரசியல் சட்ட நிர்ணய சபை கூடிய பொழுது ஒருவருக்கும் இதில் விருப்பமில்லை. மவுண்ட்பேட்டன் திட்டமாக மீண்டும் கூட்டாட்சித் தத்துவம் கவனத்துக்கு வந்தது. அரசியல் நிர்ணய சபை கூட்டாட்சித் தத்துவத்தை உருவாக்கக்கடுமையாக உழைக்க வேண்டி இருந்தது. இருந்தாலும் சிலர் இதற்கு மாறான எண்ணங்களையும் கொண்டு இருந்தனர்.

1917-ல் இருந்து கூட்டாட்சி எண்ணம் இருந்தாலும், காசிப் பல்கலைக் கழகத்தில் அட்வொகேட் ஜெனரல் சர். விநோத சந்திரமித்ரா கூறியதைப் போன்று 1935-ம் வருட இந்தியச் சட்டப்படி இந்திய அரசு ஒற்றையாட்சி அரசாகவே (unitary Government) செயல் பட்டு வந்தது அரசியல் நிர்ணயசபை இதைக் கூட்டாட்சியாக மாற்றியது.

1935-வது இந்தியச் சட்டம் ஆங்கில அரசின் நலன்களுக்கொப்ப இந்திய மன்னர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கூட்டாட்சி அமைக்கத் தீர்மானித்தது. ஆனால் அரசியல் நிர்ணய சபை (Constituent Assembly) இந்திய மன்னர்களுக்குச் சில சலுகைகளும், கௌரவங்களும் வழங்கி சுதந்திரக் கூட்டாட்சி அமைப்பை ஏற்படுத்தியது. ஆனால் அன்றைய இந்தியக் குடியரசுடன் ஏனைய மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்த பகுதிகளை இணைத்து ஒரு நாட்டை உருவாக்க வேண்டி இருந்ததால், ஒருபலம் வாய்ந்த மத்திய அரசு தேவைப்பட்டது. எனவே தான், கூட்டாட்சியாக இந்தியக் குடியரசை உருவாக்க நினைத்தாலும், மத்திய அரசின் கட்டளைக்குக் கீழ்ப்படிகின்ற உறுப்புக்களாகவே மாநிலங்களை அமைத்தனர். மத்திய அரசும் மாநிலங்களும் எஜமானன், வேலைக்காரன் என்ற நிலையிலேயே இருந்தன. ஒற்றையாட்சி அரசின் (unitary Government) பண்புகள் இந்தியக் கூட்டாட்சியில் புகுந்து விட்டமைக்கு, இந்த நாட்டிணைப்பு லட்சியமே முழுக்காரணமாக இருந்தது.

இந்தியக் கூட்டாட்சி—கூட்டாட்சியா?—ஒற்றை ஆட்சியா?

இந்தியக் கூட்டாட்சிக் குழந்தை கடினப் பிரசவத்தில் பிறந்து விட்டது! நோயாளி வைத்தியர்கள் வேதனையால் நொந்திருந்த தாயிடம் வைத்தியம் பார்த்ததன் பலன், இந்தியக் கூட்டாட்சி என்ற அவசரகோல அரைகுறைப் பிரசவம்! அரைகுறைப்பிரசவத்தில் உதித்த குழந்தை அங்கஹீனமாகவே உள்ளது! அங்கஹீனமாகப் பிறந்துள்ள அரசியல் சட்டத்தில் ஆட்சி முறைத்தத்துவம்—கூட்டாட்சி முறைத் தத்துவம்-செம்மையாக உள்ளதா?—என்ற வினாவுக்கு விடைகாணுவோம்.

பேராசிரியர் வியர் (Prof Wheare) கொள்கைப்படி, கூட்டாட்சி அரசியல் சட்டதிற்கு முதலில் தேவையானது தனித்த, நிலையான, சுதந்திரமான (distinct, Coordinate, independent) அரசுகளின் இடையே நிலவ வேண்டிய இயங்கும் பகுப்பே (divisions of functions) ஆகும். ஆனால் இந்திய அரசியல் சட்டத்தில் தெளிவான தனிரசுகளுக்குத் (distinctstate)

தனிவிதி இல்லை. மத்திய அரசு மாநில அரசுகளின் பகுதிகளை மாற்றும் அதிகாரம் கொண்டுள்ளது. இன்றைய தமிழக அரசுடன் இணைந்திருந்த ஆந்திர மாநிலம் பொட்டி சீராமலுவின் உயிர்த்தியாகம் மூலம் பிரிவினை கேட்டது. அதனை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு, ஆந்திர மாநிலம் என்ற புதிய மாநிலத்தை இந்தியக் குடியரசில் ஏற்படுத்தியது. அரசியல் சட்டப்பிரிவு 3-ன்படி இந்த அதிகாரம் (1956, 1960, 1966) ஆண்டுகளில் மட்டும் மாநில அரசுகளின் எல்லைகளைத் திருத்தியமைக்க பயன்படுத்தப் பட்டதாக வாதிட்ட போதிலும், அரசியல் சட்டத்தில் எந்த வார்த்தை இருந்தாலும், செயல் வடிவில் மத்திய அரசின் எதேச் சாதிகாரக் குவியலையே காட்டுகிறது. அமெரிக்க அரசில் இந்த அதிகாரம் இருந்தாலும் சம்பந்தப் பட்ட மாநில அரசின் சட்ட மன்றத்தைக் கலந்தே செய்ய வேண்டி உள்ளது. கெண்டக்கி, மெய்ன், மேற்கு வர்ஜீனியா போன்ற மாநிலங்கள் இவ்வாறு அமைக்கப்பட்டன. ஆஸ்திரேலியாவிலும் இது போன்ற அமைப்பே உள்ளது.

இதனை, "The idea of distinct States in the sense of units with well defined entities really rests on the historical experience that till India decided to set up a federal government, such government had always been formed by distinct units of governments desiring to come together and vest a new general government with powers of its own. under-such circumstances, the units were anxious to secure their Continued existence as before But the Indian federation Came into existence by a unitary state creating new regional units and endowing them with independent functions- (The Indian Federal Structure-Sri. Ram Sharma, Director Institute of public Administration, Una, Punjab) என்று கூறுவர்.

கூட்டாட்சியின் உண்மையான தன்மையைப் புரிந்து கொள்ள மத்திய அரசுக்கும், அதன் உறுப்பு அரசுகளுக்கும்

உள்ள செயல்படும் விதத்தை ஆய்தல் வேண்டும். உலகிலேயே அதிக அளவு அதிகாரங்களைக் கொண்ட கூட்டாட்சி இந்திய அரசே! (The Federal government in India enjoys greater authority then do such governments elsewhere The Indian Federal structure).

இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள சட்டமியற்றும் பகுதிகளில்—மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் பொதுவான சட்டமியற்றும் பகுதிகளில்—(மத்திய அரசுக்கு) மிகுந்த அதிகாரங்கள் உள்ளன. (The Common field covered by concurrent power is certain ly larger in India than it was in any of these four Constitution (Australia, America, Swiss, Canada) to begin with—The Indian Federal Structure).

இந்திய அரசியல் சட்டம் மாநில அரசுகளின் சட்டமியற்றும் அதிகாரங்கள் மீது மத்திய அரசு சட்டமியற்ற வகை செய்கிறது. (The Indian Constitution further allows the federal government to legislate on a state subject if two or more governments so require it—The Indian Federal structme).

இவைகள் மட்டும் அல்லாமல் ஒரு மாநில அரசின் இயக்கத்தினைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் மத்திய அரசுக்கு உள்ளது. (The exercise of the state functions has been declared to be limited by the union's exercise of powers vested in it—The Indian Federal Structure.) அரசியல் சட்டத்தின் 356, 365-ஆகியவைகளின் படி ஒரு மாநிலத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தையும், அமைச்சரவையையும் அம்மாநில ஆளுநரின் புகாரின் பேரில் நாட்டின் ஜனாதிபதி கலைத்து விடலாம். இது ஒரு மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள கட்சி, மத்திய அரசினை நடத்துகின்ற கட்சியோடு வேறுபட்டு, மாற்றுக்கட்சியாக இருந்தால், அம்மாநில அரசினைக் கவிழ்க்கவும் பயன்படுகிறது. கேரளாவிலும், உத்தரபிரதேசத்திலும் இம்முறையில் மாநில ஆட்சி,

மத்திய அரசால் கவிழ்க்கப்பட்டது. ஆளுநரின் 'புகாரும்' ஜனாதிபதியின் 'அதிகாரமும்' செயல்படும் விதம் மத்தி அரசினை ஆளுகின்ற கட்சியின் கையில் அடங்கியுள்ளதென்பது உண்மை. ஜனநாயகத்தின் மென்னி இங்கே முறிக்கப்படுகிறது!

மேலும், எச்ச அதிகாரங்கள் (Article. 248 Residuary powers) மத்திய அரசிடமே உள்ளன. இது எல்லா நாட்டின் கூட்டாட்சியிலும் மாநில அரசிடமே உள்ளது. இது ஒன்றே மத்திய அரசின் அதிகாரக்குவியலைத் தெளிவாகக் காட்டுகிறது எனலாம்.

மாநில அரசின் அதிகாரப் பட்டியலில் உள்ள ஒரு அதிகாரத்தை மத்திய அரசுப் பட்டியலுக்கு ராஜ்ய சபையின் மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் தீர்மானத்தால் மாற்ற முடியும். அமெரிக்க செனட்டைப்போல ராஜ்ய சபையில் எல்லா மாநிலங்களுக்கும் சமமான உறுப்பினர் எண்ணிக்கை இந்திய ராஜ்ய சபையில் இல்லை என்பது இங்கே நினைவு கூறத்தக்கது. இந்நிலையில் ஒரு மாநில அரசின் சட்டமியற்றும் அதிகாரத்தை, அம்மாநில அரசைக் கட்டுப்படுத்த விழைகின்ற, ஒரு சில குறிப்பிட்ட மாநில அரசுகளால் அதிக உறுப்பினர் எண்ணிக்கையினை ராஜ்ய சபையில் பெற்றிருக்கின்ற காரணத்தால்—பறிக்க முடியும். காட்டாக, தமிழக அரசு, பேரறிஞர் அண்ணாவால், தமிழகப் பள்ளிகளில் இந்தி மொழி பயிற்றுவிக்கப்பட்டதை, இந்தித்திணிப்பை எதிர்க்கும் நோக்கோடு நிறுத்திவிட்டது. மும்மொழிக்கொள்கை தமிழக மாணவர்களுக்கு அதிக சுமையினைத் தருவதால் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தமிழகத்தின் இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியுள்ளார்.

இங்கே தமிழகத்தில் நிலை இப்படி உள்ளது! இந்த உரிமையைப் பறிக்க சில இந்தி பேசும் மாநிலங்களின் ராஜ்யசபை உறுப்பினர்கள் எண்ணினால் நிலைமை என்னவாகும் என்பதனைச் சற்று எண்ணிப்பாருங்கள்!

அரசியல் சட்டப்பிரிவுகள்-352, 356, 365ன்படி போர்க் காலங்களிலோ அல்லது அதைப் போன்ற நெருக்கடிக் காலங்களிலேயோ மத்திய அரசு எல்லாவித அதிகாரங்களையும் மேற்கொண்டு ஒரு சர்வாதிகார அரசாகக் கூடத்தன்னை உருவாக்கிக் கொள்ள முடியும்.

பிரிவு 257-ன்படி எல்லாவித செய்திப் போக்குவரத்துக்களின் (தொலைபேசி, விமானம், கப்பல், ரயில்வே, வானொலி, கம்பியில்லாத்தந்தி, தபால்), மீது மத்திய அரசு ஆதிக்கம் கொண்டு சர்வ வல்லமை கொண்டதாகத் திகழ்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கூட்டரசில் மத்திய அரசு தந்தி, தொலைபேசி, கம்பியில்லாத தந்தி, வானொலி இவற்றைத்தான் கொண்டுள்ளது. தேசீயப் போக்குவரத்து வசதிகளை எல்லாம் மாநில அரசே மேற்கொண்டுள்ளது. ஆனால், அமெரிக்க மத்திய அரசு இவைகளை ஒழுங்கு படுத்துகிற பொறுப்பை மட்டும் கொண்டுள்ளது.

மத்திய அரசின் எதேச்சாதிகாரப் போக்குக்கு மற்றோர் எடுத்துக்காட்டு, மேற்கு வங்கம், பீகார், உத்தரப்பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களில், ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்ட பொழுது, மேற்குவங்கத்தில் அப்படி ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டதன் காரணமாக வந்த நிலங்களை மத்திய அரசே மேற்கொண்டது. அதனை மேற்கு வங்கம் கூட்டாட்சி அமைப்பில் அந்த நிலங்களை மேற்கொள்ளும் உரிமை தனக்கு இருப்பதாக வாதிட்டது. ஆனால், சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசின் பக்கமே தீர்ப்பளிக்கப்பட்டது. விலைவாசிக் கட்டுப்பாடு வங்கித்தொழில், டிரஸ்ட்கள், வர்த்தக, தொழிற்சாலை ஏகபோகங்கள், மின்சாரம், தொழிற்சாலைகள், தொழில்துறை தகராறுகள், அற நிலையங்கள் தொழிற் சங்கங்கள் ஆகிய இவைகள் பொதுப்பட்டியலில்(சட்டமியற்றும் அதிகாரங்கள்) உள்ளன. இவைகள் மீது பொதுவாக மத்திய அரசு நடவடிக்கை எடுப்பதில்லை. ஆனால், தனக்குள்ள அவசரகால அதிகாரத்தின் மூலம் மாநில அரசின்

கொள்கைகள், முடிவுகள் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. சிம்சன் பிரச்சினையினை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள விவசாயம், கால்நடை வளர்ப்பு, நீர் வசதிகள், பாசனவசதி, தொழிற்சாலைகள், மீன்துறை, சுரங்கங்கள், வாயுக்கள், மாநில அரசுகளுக்கிடையேயுள்ள வர்த்தகத் தொடர்புகள், வட்டிக்குப் பணம் கொடுத்தல், ரேஸ், சூதாட்டங்கள் போன்றவைகளைப் பொது நலனுக்கு என்று கூறிப் பாராளுமன்றம் மூலம் மேற்கொண்டு விடலாம்.

இவ்வாறு அதிகாரப் பங்கீட்டு முறையிலும், செயல்படும் விதத்திலும் இந்தியக் கூட்டாட்சியில் மத்திய அரசுக்கு வரம்பில்லா அதிகாரங்கள் உள்ளன. பெரும் 'அதிகாரக் குவியல்' காரணமாக இந்தியாவில் கூட்டாட்சியின் பண்பு செம்மையாக இல்லை. எனவே தான், இந்தியக் கூட்டாட்சியினைப் பேராசிரியர் வியர் (Prof. Wheare) "Indian constitution established a system of government which is at most a quasi-federal almost devolutionary in unitary state with subsidiary federal features rather than a federal state with subsidiary features". என்று கூறினர். (quasi) என்ற சொல்லுக்குப் 'போன்று' (as if) எனப்பொருள் கொள்ளுதல் வேண்டும்.

இந்தியக்குடியரசு ஒரு கூட்டாட்சியினைப் போன்று காணப்பட்டாலும், உண்மையில் இதில் ஒற்றையாட்சி அரசின் (Unitary Government) பண்பே மிகுந்துள்ளது எனலாம். (Some characteristics of the Indian Constitution. Sir. Ivor Jennings) டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்திய அரசியல் சட்டத்தைப் பற்றி "a Federal Constitution in as much as it establishes what may be Called a Dual polity (which).. will consist of the union at the Centre and the state...both unitary as well as federal according to the requirements of time and Circumstances— என்று கூறியுள்ளார். "இந்திய அரசியல் சட்டம் கூட்டாட்சி முறை உள்ளது தான்! ஆனல், அந்தத் தராசு மத்திய அரசு

பக்கம்தான் அதிகப் பளு கொண்டு சாய்ந்திருக்கிறது. இது சர்தார் பணிக்கர் "புதிய இந்தியாவின் அடிப்படைகள்" எனும் நூலில் விளக்கியுள்ளவை. எனவே, பெரும் அதிகாரக் குவியல்களைப் பரவலாக்குதல் அவசியம். இல்லாவிடில் இந்தியாவின் கூட்டமைப்பில் உள்ள பகுதிகள் மத்திய அரசிலிருந்து சிதறுண்டு போகக்கூடிய அபாய நிலைக்கு வந்துவிடும்.

மத்திய அரசின் ஆதிக்க உணர்வு

இத்தகு கூட்டாட்சி அமைப்பில் மக்களுக்கும், மாநில அரசுக்கு இடையிலும், மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கு மிடையிலும் உள்ள "தொடர்புகள்" பொருத்தமில்லாமல் உள்ளன. சமதர்மச் சமுதாய அமைப்பை ஏற்படுத்தவும், மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், திட்டங்கள் மூலம் கிடைக்கும் பலன்கள் வறுமையைப் போக்கவும், அதிகாரக்குவியல்கள் பரவலாக்கப்படுதல் அவசியம். மத்திய அரசு மாநில அரசுகள் மீது அரசியல், பொருளாதாரம், மொழி ஆகிய துறைகளில் ஆதிக்கம் கொண்டுள்ளது. நேரு அவர்கள் மாநிலங்கள் வெறும் ஆட்சி உறுப்புக்கள் மட்டுமே (Mere administrative units) என்று மாநிலங்களை வர்ணித்துள்ளது இங்கே குறிப்பிடத்தக்கது. மாநிலங்கள் தகுந்த வலிமை வாய்ந்த உறுப்பாகத் திகழ வேண்டும் என்பது தி. மு. கழகத்தின் அவா. தி. மு. கழக நாடாளுமன்றத் தலைவர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் மாநில மத்திய அரசுகளைப் பற்றி, "I am of the opinion that the states are infrastructure and the centre is super structure"—என்று நவின்றிருக்கிறார், ஆக மத்திய அரசு, மாநில அரசுகள் மீது கொண்டுள்ள தேவையற்ற கட்டுப்பாடும், ஆதிக்க உணர்வுமே இன்றைக்கு மாநில சுயாட்சிக்கோரிக்கை எழுவதற்கு காரணமாக உள்ளது.

மத்திய அரசின் நிதித்துறை ஆதிக்கம்

மத்திய அரசு மாநில அரசுகள் மீது கொண்டுள்ள வரம்பில்லாத நிதித்துறை அதிகாரமே இன்று மாநில சுயாட்சிக்

கோரிக்கை எழுவதன் அடிப்படைக்காரணமாகும். மாநிலங்கள் தங்கள் வருவாய்களை பெருக்கிக் கொள்ளும் வகையில் தேவையான அதிகாரங்கள், மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இது பற்றி தி. மு. கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள், "மாநில சுயாட்சி என்று நாங்கள் கூறும்போது மாநிலங்களுக்கு தங்கள் வளங்களை வளர்த்துக் கொள்ளும் வகையில் அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டும். அதன் மூலம் ஒவ்வொரு மாநிலமும் தன் சொந்தக் காலிலேயே நிற்க முடியும். நிதி வருவாய்களை விரிவாக்க மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் தரப்பட வேண்டும். அப்போது தான் ஒவ்வொரு மாநிலமும்—அரசியல் சட்ட வரைவைக் குலைக்காமல், ஆனால் அதில் வேண்டிய மாறுதல்களோடு தனது சொந்தக்காலிலேயே நிற்க முடியும். தி. மு. கழகத்தின் மாநில சுயாட்சிக் கோரிக்கையின் முழுமையான சாரம் இதுதான்"—என்று கூறியுள்ளார்.

மத்திய அரசின் நிதித்துறை ஆதிக்கம் பற்றி தி. மு. கழகத்தின் நிலையை விளக்குவதாக, திரு. பி. வி. கிருஷ்ண மூர்த்தி என்பவரின் கூற்றுக்கள் உள்ளன. அவர்,

"மத்திய அரசாங்கத்தின் பொருளாதார அதிகாரம் தன்னைத்தானே இயக்கிக் கொண்டு விரிந்து செல்லும் தன்மையை இருபதாண்டு காலமாக வளர்த்து வந்துள்ளது. மத்திய அரசின் இந்தப் பொருளாதார வளர்ச்சி அளவானது, இந்தியாவில் உள்ள மாநிலங்கள் எல்லாவற்றின் பொருளாதார சக்தியையும் ஒன்றாகத் திரட்டினால் ஏற்படும் அளவையும் மிஞ்சிக்கொண்டு, முன்னேறி பெருக்கம் கண்டுள்ளது. மத்திய அரசாங்கத்திற்கு பாங்கிகள், உயர்க்காப்பு நிதி, வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு உதவி, அஞ்சலகவைப்புத் தொகை, பிற வாய்ப்புக்கள், வரியில்லாத வருவாய்கள் ஆகிய இவற்றில் கிடைக்கும் வருவாய்களை ஒரு புறம் வைத்துவிட்டுப் பார்த்தாலும்—இந்த நிதிமுறை அமைப்பானது தனது நடவடிக்கை மூலம் மத்திய அரசுக்கு மேலும், மேலும் பெரிய அளவில்—மாநிலங்களுக்கு எதிர்முறையில்—நிதி அதிகாரத்திற்கே வழி காட்டக்கூடியது.

இது பற்றிய புள்ளி விவரம் அதிர்ச்சி தரும் உண்மையை புலப் படுத்துகின்றது. 1955-56ல் மத்திய அரசின் முழு மொத்த வருவாய் ரூ.554·73 கோடி. 1971–72லோ மத்திய அரசின் முழு மொத்த வருவாய் ரூ. 4500 கோடி. மற்றொரு வகையில் மாநி லங்களின் வரி வருவாய் (மத்திய அரசிடமிருந்து மாற்றியளிக் கப்படும் நிதியில்லாமல் கிடைக்கும் வரி வருவாய்) 1955-56ல் ரூ. 427.58 கோடியாக இருந்தது. 1971-72ல் (ஏறத்தாழ சரி யான அளவு) ரூ. 1600 கோடியாக வளர்ந்துள்ளது.

மத்திய அரசாங்கம் ஒரு புறமும், மற்றெல்லா மாநிலங் களும் ஒன்றாகச் சேர்ந்த நிலையில் ஒரு புறமும், நிதி வருவாய் பெறும் வாய்ப்புக்களையும், வளங்கள் பற்றிய பலத்தையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது 1954-56ல் மத்திய அரசு எல்லா மாநிலங்களுக்கும் மொத்தமாகக் கிடைக்கும் நிதிவளத் தினும் 1 : 25 அளவில் வலிமை பெற்றிருந்தது. 1971. 72லோ மத்திய அரசாங்கத்தின் இந்தப்பலம் இரட்டிப்பு ஆகியுள்ளது.

என்று கூறியுள்ளார். இக் கருத்தின் படி நமக்கு இரண்டு விளக்கங்கள் புரிகின்றன.

(1) இந்நாடு முழுவதிலுமுள்ள நிதியமைப்புக்கள் எல்லா வற்றின் மீதும் மத்திய அரசாங்கத்திற்கு நிதி அதிகாரம் உள்ளது.

(2) நெகிழ்ந்து நீளும் தன்மை பெற்ற வரிகள் எல்லா வற்றையும் மத்திய அரசு வைத்துக் கொண்டுள்ளது. நெகி ழவோ, நீளவோ முடியாத வரிகள் மட்டும் மாநில அரசுகளி டம் விடப்பட்டுள்ளன. இவ்வாறு மத்திய அரசுக்கு வரம்பில் லாத அதிகாரக் குவியல்களின் மூலமாக பெரும் வருவாய் வழி உள்ளது. மாநில அரசுகளுக்கோ எதற்கெடுத்தாலும் மத் திய அரசினை எதிர்பார்க்க வேண்டிய நிலைமை. மத்திய அர சின் ஆடம்பரத் திட்டங்களும், செயல்களும் இந்த அளவு கடந்த வருவாயினைப் பாழடித்து விடுகின்றன. மூன்றுவது நிதிக்குழுவின் அறிக்கை (Third Finance commission's Report) மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடை

யில் உள்ள நிதித்துறைக் கொடுமையினை நன்கு விளக்குகிறது.

(1) மாநிலங்கள் மத்திய அரசின் உதவியை நம்பிச் சார்ந்திருக்கும் நிலை தொடர்ந்து வளர்ந்து வருவது முக்கியமானதும், வேதனை அளிக்கக் கூடியதுமான அம்சம். மாநிலங்கள் சொற்ப மானதும் நீட்சியற்றதுமான நிதி ஆதாரங்களை நம்பிக் கிடக்கின்றன.

(2) நிதிப் பிடிப்பு அனைத்தும் மத்திய அரசிடமிருக்கின்றன. இக்காரணங்களால் தான் மேற்சொன்ன நிலை உருவாகிறது

(3) மாநிலங்களின் பட்டியலில் உள்ள வரிவிகிதங்கள் கணிசமான அளவு உயருமெனினும் அதிகப்படியான நிதிவருவாய் என்பது இல்லை.

(4) மத்திய அரசைச் சார்ந்துள்ள நிலைமை அதிகரிப்பதால் மாநில அமைச்சரவைகள் சட்டமன்றங்களுக்குப் பதில் சொல்லும் நிலை நசித்து வருகிறது.

(5) இன்னொரு பக்கம் தங்கள் நிர்வாகத்தில் காட்ட வேண்டிய மிகுந்த பொறுப்புணர்வுத் தன்மையை இது குறைத்து விடுகிறது.

இக் கருத்துக்கள் அனைத்தும் மூன்றாவது நிதிக்குழுவில் காணப்படுகின்றவைகள். மாநில அரசுகள் எந்த அளவுக்கு மத்திய அரசால் நசுக்கப்படுகின்றது, என்பதற்கு நிதிக் குழுவின் இக் கருத்துக்களே தக்க சான்றுகளாக உள்ளன. மத்திய அரசின் ஆதிக்கம் நிதித்துறையில் நீங்குவதற்காகத் தான் மாநில சுயாட்சியினை தி.மு.கழகம் வேண்டுகிறது. மாநில அரசுகள் சுயமான வருவாயினைப் பெற்று வலிமையாகத் திகழவே மாநில சுயாட்சி வேண்டுகிறது தி.மு.கழகம்.

மொழித்துறை ஆதிக்கம்

நிதித்துறையில் மட்டுமல்லாது-மொழித்துறையிலும் மத்திய அரசு ஆதிக்கம் கொண்டுள்ளது. பெரும்பான்மை என்ற பெயரால் சிறுபான்மையினரின் உரிமையைப் பறிக்கின்றனர். ஜனநாயகத்தில் பெரும்பான்மைத் தத்துவம் சிறு பான்மையினரின் நலன்களைக் காலடியில் இட்டு மிதிக்கின்ற கொடுஞ் செயலாக இருந்தால் எந்த லட்சியத்திற்காக நாம் ஜனநாயகப் பண்பை உருவாக்கினுமோ அந்த லட்சியமே அழிந்து பட்டு விடும்! கையது கொண்டு மெய்யது போர்த்தி கடும் ஏழையாக வேண்டுமானுலும் வாழலாம், உரிமையோடு! உரிமை இலலாத வாழ்வில் உயிரோட்டமே இல்லை! அப்படி உரிமை உணர்ச்சிக்கு உரமிடுவது மொழிப்பற்றும் இனப்பற்றுமாகும். ஆனுல் மத்திய அரசில் ஆதிக்கம் கொண்ட இந்தி பேசுவோர் மற்றவர்களின் மொழிப் பற்றினை—மொழி வெறி என்கின்றனர்—தங்கள் மொழி வெறியினை மொழிப்பற்று—தேசப்பற்று—என்று கூச்சலிடுகின்றனர். மகாத்மா காந்தியடிகள் இந்து-முஸ்லிம் ஒற்றுமையைக் காப்பாற்ற எவ்வளவோ முயன்றும் இறுதியில் அவரால் முடியவில்லை. மகாத்மா அவர்கள் இதனைப் பற்றி, ‘‘மத்தியில் யார் ஆதிக்கம் வகிப்பது ஹிந்துக்களா? முஸ்லிம் களா? இதுதான் கேள்வி. இது சம்பந்தமாய்க் காங்கிரஸ் அதிகம் விட்டுக் கொடுக்கத் தயாராய் இருக்க வேண்டும். பாராளுமன்றக் குடியாட்சி பெரும்பான்மை அரசு முதலிய தத்துவங்களைத் தூக்கி எறிந்து விடவேண்டும். வேறுபட்ட இரு பண்பாடுகள் சேர்ந்து வாழ வேண்டியிருக்கையில், அவை பொருத்தமில்லை. பெரும்பான்மை ஆட்சி ஒரு பண்பாட்டை மற்றென்று அடக்கி யாள்வதாகவே முஸ்லிம்களுக்குத் தோன்றும், அல்லது அந்த அச்சமாவது இருக்கும். காங்கிரஸ் இதை விளங்கிக் கொள்ள வேண்டும். இல்லையேல் பிரிப்பது, ஒரே வழியாகா விடினும் உத்தமமான வழியாகி விடும்’’ இவ்வாறு கூறினுர்.

இதிலிருந்து இந்திய ஒருமைப் பாட்டுக்குப் பெரும் பான்மைத் தத்துவம் பலனளிக்காது என்பது தெள்ளத் தெளிவாக

விளங்குகிறது. எனவே, மொழிப் பிரச்சினையில் ஆதிக்க உணர்வு கூடாது—பெரும் பான்மை என்ற பெயரால் சிறுபான்மையினர் நலன்களையும், உரிமைகளையும் பறிக்கக் கூடாது என்று தி.மு.கழகம் கூறிவருகிறது இந்தித் திணிப்பை எதிர்த்து வருவதும் இதன் காரணமாகத் தான். இந்திய ஒற்றுமைக்குக் கேடுவருவதெல்லாம் இந்தி மொழித்திணிப்பால் தான் என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது. இந்தி ஆட்சி மொழியாக வருவதால் இந்திய ஒருமைப்பாட்டுக்குக் கேடு விளையும் என அரசியல் நிர்ணய சபையிலேயே எச்சரிக்கப்பட்டது.

(English had all manners of virtue and Hindi might have several short comings but the union's official language would have to be Hindi. Strong dissent came from two of the twenty members, one Bengali and one from Madras, they expressed alarm and despondency at the damage that would be done to the Unity of India – The Government and politics of India – W. H. Morris Jones)

ஆனால், இறுதியில் இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி ஒரு வோட்டு பெரும்பான்மையில் (one vote majority) அரைகுறைச் சமாதானத்தோடு (Half Heart Compromise) ஏற்றுக் கொள்ளப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை மொழிப்பிரச்சினையால் இனப் பற்றும், பிரதேச வெறியும் வளர்ந்து இந்திய ஒருமைப்பாட்டையே அச்சுறுத்தி வருகிறது.

இந்தி வெறியர்களின் போக்கைக் கண்டு மிரண்ட பஞ்சாபியர்கள் 'பஞ்சாபி சபா' அமைத்தனர். மாஸ்டர் தாராசிங் அகாலி தளக் கட்சியின் தலைவராக ஆகி, சீக்கியர்களுக்குத் தனி நாடு கேட்டார். பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்பு ஆங்கிலேயரிடம் 'சிக்கிஸ் தான்' கேட்டனர். வங்காளிகள் இந்தி ஆதிக்கத்தினை எதிர்த்தனர்.

தமிழகத்தில் ராஜாஜி இந்தியைப்புகுத்திய போது தந்தை பெரியார் அவர்கள் இந்தியை எதிர்த்தார். பிறகு பேரறிஞர்

அண்ணு அவர்கள் தமிழக முதல்வராக வந்ததும் இந்திக்குத் தமிழகத்தில் இருப்புக் காப்பிட்டு அடக்கினர். இந்தித் திணிப்பை எதிர்த்துத் தங்கள் இன்னுயிர் ஈந்தனர் மாணவர்கள் பலபேர். தீக்குளித்துச் செத்த செந்தமிழ் மறவர்கள் புகழ் பரணி பாடுதற்குரியதாகும்.

இந்தி தேசிய மொழியாவது தான் இந்திய ஒருமைப் பாட்டுக்கு வழி என்று கூறிவரும் பிரதமர் இந்திரா உலகில் நடைமுறையில் உள்ள எடுத்துக்காட்டுகளைக் காண வேண்டும்.

இங்கிலாந்துடன் இணைந்திருந்த ஐரிஸ் மக்கள், ஆங்கிலேயரின் ஆங்கில மொழியைப் பொதுமொழியாகக் கற்றுக்கொண்டனர். ஆனுல் அவர்கள் ஆங்கில மொழியைப் படித்ததால் தங்கள் 'ஐரிஸ் தேசீய இனத் தன்மையை இழக்க வில்லை. இங்கிலாந்திலிருந்து பிரிந்து தனி நாடு ஆயினர்.

ஐக்கிய இங்கிலாந்து (United kingdom) ஒரு பொது மொழியைப் பெற்ருலும், இங்கிலாந்து அரசியல் வாழ்வில், ஸ்காட்டிஷ் தேசீய இனமும், (Scotish) வேல்ஸ் தேசீய இனமும் (Welsh nationalism) காணப்படுகின்றது. ஆஸ்திரிய ஹங்கேரிய நாட்டில் (Austro - Hungarion state) ஜெர்மன் மொழிபேசும் ஆஸ்திரியர்கள் பெரும் பான்மையினராக இருந்தனர். அவர்கள் ஜெர்மன் மொழி பேசாதவர்கள் (non—Geromanic people) மீது தங்கள் மொழியைத் திணித்தனர். பயன்? உலகப் போருக்குப்பின் இரு நாடுகளும் பிரிந்து விட்டன.

போலந்தில் ரஷ்ய மயமாக்குதல் (Russification) மிகத் தீவிரமாய் நடை பெற்றது. போலிஷ் இலக்கியமும், மொழியுங் கூடப் போலந்தியர்களுக்கே ரஷ்ய மொழியில் சொல்லித்தரப் பட்டது. லித்துவேனியாவிலும், உக்ரைனிலும் ரஷ்ய மயமாக்குதலுக்கு மதச்சாயம் பூசப்பட்டது. தொழில் மேம்பட்ட ரஷ்ய மொழிப்பகுதிகளைத் தவிர, ஏனைய மொழிப்பகுதிகள் புறக்கணிக்கப்பட்டன. இவைகளெல்லாம் ஜார் மன்னர்களின் கொடுங்கோன்மையால் நடைபெற்றன.

இவையெல்லாம் பின்பு மாவீரன் லெனின் செய்த புரட்சியால் தகர்க்கப்பட்டுத் தேசீய இனம், மொழி பண்பாடு இவைகள் மீது எழுந்த அரசுகளின் இறைமைத்தன்மை ஒப்புக்கொள்ளப்பட்டு, பிரிந்து போகும் உரிமை வழங்கப்பட்டு, இன்றைய சோவியத் கூட்டாட்சி எழுந்தது.

இவைகள் மட்டுமல்ல, பிரதமர் இந்திரா அவர்களே கூறுகின்றபடி வங்காள தேசம் உருவானமைக்குக் காரணம் மொழி உணர்ச்சியும், பண்பாட்டுப் பெருமையுமே யாகும். மேலும், ஸ்விட்சர்லாந்து மக்கள் ஒரு பொது மொழி இல்லாமலே, ஒரே நாட்டினராக வாழ்வதும் நோக்கத்தக்கது. இவைகளினால், "ஒரு பொது மொழி இல்லாமல் இந்தியாவின் ஒருமைப்பாடு காக்கப்பட முடியாது"—என்ற தத்துவத்தைப் பொய் என்று கூறலாம். (National unity of India will remain unreal without a national language-Indianisation-Balraj madhok).

ஜனசங்கத்தினரைப் பிற்போக்கு மதவாதிகள் என்று கூறும் இந்திரா அம்மையார், அண்மையில் விசாகப் பட்டினத்தில் இந்தி என்ற பொது மொழியால் தான் இந்திய ஒருமைப்பாடு காக்கப்படும் என்று கூறி, ஜனசங்கத்தினர் பக்கம் சார்ந்திருப்பது அவரது சந்தர்ப்பவாதத்தைக் காட்டுகிறதா என்று தெரியவில்லை! இருந்தாலும், "Opportunitism will never make a philosophy"—என்ற அரசியல் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டுவது இந்திரா அம்மையாருக்கு அவசியம்! மதமும், மொழியும் இந்திய ஒருமைப் பாட்டைக் காக்கப் போவதில்லை. சமத்துவமும், சகோதரத்துவமும் தான் இந்திய ஒருமைப் பாட்டுக்கு வழி.

அன்றைய மத்திய அரசின் அதிகாரத்தில் இருந்த பிற்போக்கு இனவெறியர்களும், மொழி வெறியர்களும் இந்தியக் கூட்டாட்சியில் மாநிலங்கள் உரிய அதிகாரங்கள் பெறுமல் செய்து விட்டனர். இந்தியாவின் ஒருமைப் பாட்டுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய பிரிவினை எண்ணம் நாட்டின் மக்களில்

பல பகுதியினருக்கு ஏற்படக் காரணம் இப்படிப்பட்ட ஆதிக்க உணர்வுள்ள மத்திய அரசு தான். மத்திய அரசு வடக்கத்தியர்களின் குறிப்பாக இந்திமொழி பேசும் பகுதியினரின் ஆதிக்கத்தில் என்றைக்கும் உள்ளதாக இருக்கவே மத்திய அரசில் அதிகாரங்கள் குவிக்கப் பட்டுள்ளன. இந்தி மொழி மூலம் மற்ற மொழிக்காரர்களை மறைமுகமாக அடிமைகளாக்கவும், ஆதிக்கம் செலுத்தவும் நினைத்த காரணத்தாலேயே இந்தி எதிர்ப்பு, இந்தி பேசாதவர்களிடம் எழுந்தது. மொழிப் பூசல் மட்டு மல்லாது, வடக்கு—தெற்கு மனப் பான்மையும் மத்திய அரசில் இருந்த இந்தி வெறியர்களால் தான் ஏற்பட்டது. இதன் விளைவுகள் தான் திராவிடநாடு பிரிவினைக் கோரிக்கை, சுதந்திரத் தமிழ் நாடு கோரிக்கை, போன்றவைகளாகும். எனவே, இன்றைக்கு திராவிடநாடு கேட்ட ஒரே காரணம் பற்றியே, தி. மு. க. வினரை பிரிவினைவாதிகள் என்கின்றனர். பிரிவினை கேட்டவர்கள் தி. மு க. வினராக இருக்கலாம். ஆனால், பிரித்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் தான் என்பதைச் சரித்திரம் கூறுகின்றது.

இந்தியை மத்திய அரசு ஊழியர்கள் கட்டாயமாகப் படிக்கவேண்டும் என வற்புறுத்தப் படுகிறார்கள். இந்திய ஒருமைப் பாட்டுக்கு இந்தி ஆட்சி மொழியாக வருவது தான் வழி எனப் பிரதமர் இந்திரா காந்தி கூறுவது அவருடைய இந்தி வெறியையும், ஆதிக்க உணர்வையுமே காட்டுகிறதே ஒழிய வேறில்லை. இந்திக்குத் தான் இந்திய அரசியல் சட்டத்தில் ஒரு முக்கிய தகுதி உள்ளதே தவிர, வேறு எந்த இந்திய மொழிகளுக்கும் இல்லை. இந்தி மொழியைப் பரப்புவதில் தான் மத்திய அரசு தீவிரம் காட்டுகிறது. இது மட்டுமல்ல சமீபத்தில் ஆந்திராவில் நடந்த ஒரு சம்பவம் இந்தி பேசாத இளைஞர்களின் எதிர்காலத்தைப் பற்றி அச்சப்படத்தக்க அளவில் உள்ளது. ஆந்திர மாநில மின்சாரவாரியத்தில் இளநிலைப் பொறியாளர்களின் (Junior Engineers) நேர் முகத் தேர்வில், அவர்கள் 'சந்தமாமா' என்ற இந்தி இதழைப் படித்துப் பொருள் கூறும் படியும், சில இந்திப் பகுதிகளைப்

படிக்கும் படியும் கேட்கப் பட்டுள்ளனர். இந்த நிகழ்ச்சியைப் பற்றி ஒருவர் 8-2-72 அன்று 'இந்து'ப் பத்திரிகையின் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' என்ற பகுதியில் வருத்தத்துடனும், கொதிப்புடனும் எழுதியுள்ளார். விசாகப் பட்டினத்தைச் சேர்ந்த V. ராதாகிருஷ்ணு என்ற அவருடைய சூடான கேள்வியினைக் கீழே தருகிறேன்.

"The Junior Engineers of APSEB do not go out of Andhra Pradesh. So What is the necessity requiring them to have proficiency in Hindi? Inspite of the assurances of responsible leaders, the people are being forced to study Hindi even though it is not necessary for them."—என இவ்வாறு அந்த ஆந்திர மாநில இளைஞர் கேட்டுள்ள கேள்வி, இந்த நாட்டின் இந்தி பேசாத இளைஞர்கள் அனைவரையும் சிந்திக்க வைக்கும் என எதிர்பார்க்கிறேன்.

ஆக முற்றிலும் இந்தி ஆதிக்க உணர்வோடு மத்திய அரசு செயல்பட்டு வருகிறது எனலாம்.

இந்தி மொழியை இந்தியாவின் தேசிய மொழியாக்குவதன் மூலம் இந்தி பேசாத மக்கள் அடிமைப் படுத்தப் படுவார்கள். இது மட்டுமின்றி, வலுவான மத்திய அரசு என்ற போர்வையில் மாநில அரசுகளின் செயல்களும் கட்டுப் படுத்தப்படும். இந்திய சாம்ராஜ்யம் ஒரே தலைவன், ஒரே மொழி என்ற நிலையில் ஏகச் சக்ராதிபதியாக பிரதமரை உருவாக்குகின்ற நிலையை, இந்த நாட்டில் ஜனநாயகம் தழைக்க வேண்டுமென்று நினைப்பவர்கள் ஒருக்காலும் அனுமதிக்க மாட்டார்கள்.

மாநிலங்களின் முதலமைச்சர்கள் மத்திய அரசின் எடுபிடி பிரதிநிதிகளாகவும், மாநில அரசு வெறும் பொம்மை அரசாங்கமாகவும் உருப்பெறுகின்ற நிலை வளர்ந்து வருகிறது. வலிமை குறைந்த முதலமைச்சர்களும், வலிமை நிறைந்த பிரதமரும் நாட்டின் ஜனநாயகத் தத்துவத்தையே வீழ்த்தப் போகிறார்

கள். எனவே தான், இந்தச் சூழலில் மாநில அரசுகள் தங்களுக்கு தேவையான உரிமையை வேண்டுகின்றனர்.

இன்றைக்கு மாநில சுயாட்சிக் கோரிக்கையினை எதிர்ப் பவர்கள் இந்தி பேசுகின்ற மாநிலத்தவர்கள்—நாடாளுமன்றத் திலே பெரும்பான்மை கொண்ட எதேச்சாதிகாரவாதிகள்தான் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

அவர்களுடைய நோக்கம்; வலுவான மத்திய அரசு அல்ல சுயாட்சி பெற்ற மாநில அரசுகளும் அல்ல;

மத்திய அரசிலே இந்தி மொழி ஆதிக்கம் நிலைக்க வேண் டும். அதன் மூலம் இந்தி பேசாத பகுதி மக்களை மொழி வழி யிலும், இன வழியிலும் அடிமைப் படுத்தவேண்டும் என்ப தாகும். அதற்கு ஒரே வழி தாங்கள் மிகச் சுலபமாகப் பெரும் பான்மைபெற வழியுள்ள மத்திய அரசு வலுவான அமைப்பாக மாநில அரசுகளை அடக்கி ஆளுகின்ற தன்மை கொண்டதாக இருக்க வேண்டுமென எண்ணுகிறார்கள். ஆனால் அவர் களுக்குச் சொல்லிக்கொள்ள வேண்டியதெல்லாம் இதுதான் :

" உறவுக்குக் கை கொடுப்போம்
உரிமைக்குக் குரல் கொடுப்போம்'' என்பதே!

மாநில அரசுகளின் பின்னால் மக்கள் கூட்டம் உள்ளது. ஆனால் மத்திய அரசின் பின்னால் மாநில அரசுகளின் பிரதிநிதி கள்தான் உள்ளனர் என்பதை மத்திய அரசினர் புரிந்து கொள்ளவேண்டும். இதைப்பற்றி எட்வர்டு டி. குருசு என்னும் இந்திய அரசியல் அமைப்பு நிபுணர்; In the confrontation between the centre and the states, the latter are in a stronger Position. They have their peoples behind them where as the Centre does not have any Concentration of population to support it and the Congress at the Centre is itself so divided'' என்று கூறி, India the quest for Nationhood'' என்ற நூலிலே நவின்றிருக்கின்றார். ஆக, இந்தியாவின் ஒற்

றுமையைக் காப்பாற்ற மாநிலங்கள் சுயாட்சி பெற்றே தீர வேண்டும். இல்லாவிட்டால் இந்திய ஒற்றுமையுணர்வு மத்திய அரசின் அதிகாரப் பெருக்கத்தால் சின்ன பின்னமாக்கப்பட்டு விடும். சிதைந்து சீரழிந்து இந்தியக் குடியரசே இல்லாமலும் போய்விடக் கூடும்.

இவ்வாறு மத்திய அரசு சர்வாதிகாரம் நிறைந்த அதிகாரக் குவியல்கள் கொண்டதாக அமையக்கூடாது எனச் சுதந்திரத்திற்கு முன்பே பலர் வற்புறுத்தி உள்ளனர். 1944-ம் ஆண்டு The Future Indian Federation என்ற புத்தகத்தில் M.ராமசாமி என்னும் பெங்களூர் வழக்கறிஞர், "If power is highly Centralized in the federation, the structure will tumble down of its own top heaviness. The units must be left with adequate Powers to deal with the manifold problems which arise in their Contacts with the daily life of their Citizens" என்று கூறி, மத்திய அரசு அதிகாரக் குவியல் அற்றதாகவும், மாநிலங்கள் உரிய அதிகாரங்கள் கொண்டதாகவும் விளங்க வேண்டுமென உரைத்தார்.

மக்களுக்கு அளிக்கப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்ற விடில் ஒரு கால கட்டத்தில் 'சர்வதுறை நெருக்கடி' ஏற்பட்டு பெரும் புரட்சி தோன்றும்.

அப்படிப் புரட்சி தோன்றினால், அது நமது பண்பாட்டையும், மக்களாட்சித் தத்துவத்தையும் அழித்து, அழிவுப் பாதையில் நாட்டை அழைத்துச் சென்று விட நேரிடலாம். வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்தியக் குடியரசே சிதறுண்டு போகலாம். எனவே, உண்மையான கூட்டாட்சித் தத்துவம்நமது அரசியல் அமைப்பில் மிளிர வேண்டுமானால் அதிகாரங்கள் பரவலாக்கப் படுதல் வேண்டும்.

மாநில சுயாட்சிக் கொள்கை விளக்கம்

வரலாற்றில் ஒரு திருப்புமுனை

"மாநிலத்திலே சுயாட்சி; மத்தியிலே கூட்டாட்சி" (Federalism in Centre, Autonomy in State) என்ற முழக்கம் இந்தியக் குடியரசில் கூட்டாட்சித் தத்துவம் உள்ளபடியே

(Federal principle) நன்கு நிலைத்திருக்க வேண்டும். என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழக முதல்வருமான டாக்டர், கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் எழுப்பப்பட்டு வருகிறது. இந்திய நாட்டின் வரலாற்றில் ஒரு திருப்புமுனைத் தத்துவமாக, இன்றையதினம், இந்தியாவின் மற்றப் பகுதிகளில் இத்தத்துவத்தைக் கருதுகின்றனர்.

மாநில அரசுகளுக்குத் தங்களுடைய மக்களின் குறைகளைக் களையும் வகையில், திட்டங்களை நிறைவேற்றிட, உரிய அதிகாரங்கள் வேண்டும் என முதன் முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தனிப் பெருந் தலைவர், மறைந்த தமிழக முதல்வர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் "காஞ்சி" இதழில் எழுதப்பட்டது. இன்றைக்கு அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி அரசு நடத்தும் அவர்தம் அருமைத் தம்பியர் அனைவரின் லட்சியமும் மாநில சுயாட்சியினைப் பெறுவது தான். அதற்கொப்பவே கழகத்தலைவர் கலைஞர் அவர்கள் மத்திய அரசு பலம் பொருந்தியதாக விளங்க வேண்டுமானால் மாநில அரசுகள் வலிமை பெற வேண்டும் என வாதிட்டு வருகின்றார்.

உடலின் எல்லா உறுப்புக்களும் வலிமை பெற்று இருந்தாலேயே, உடல் வலுவுள்ளதாகக் கருதப்படும். அதைப் போன்றே மாநிலங்கள் வலிமையோடு இருந்தாலேயே மத்திய அரசும் வலிமையுடையதாக இருக்கும். அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசிலேயே குவிக்கப்பட்டு மாநிலங்கள் உரிய அதிகாரமற்று இருப்பது, உடலின் உறுப்புக்களை இயக்குகின்ற மூளை பட்டுப் திறன் பெற்று, உறுப்புக்கள் மெலிந்துள்ளதைப்போன்று உள்ளது. அறிவு காரியங்களைச் செய்யக் கட்டளையிட்டாலும் தக்க ஆற்றல் அதனைச் செயல் படுத்துகின்ற உறுப்புகளுக்கு இல்லை என்றால், எவ்வாறு சிந்தனை செயல் வடிவம் பெறும்? எனவே, சிந்திக்கும் திறன் உடைய அறிவு, செயல் திறன் உள்ளதாக இருந்திடல் வேண்டும். "A Sound mind is in a strong body" என்று கூறும் மொழிக்கேற்ப

உறுதியான உடலில் தான் கூர்மையான அறிவும் பொருந்தி இருக்கும். வலுவான மாநிலங்கள் ஒன்று சேர்ந்தால் தான் வலிமையுள்ள மத்திய அரசாக உருப்பெறுதல் இயலும்.

உரிய அதிகாரமா? அதிக அதிகாரமா?

இவ்வாறு மாநிலங்கள் "உரிய" அதிகாரங்கள் பெற்று மக்களின் துயர் (Due powers) துடைக்க எண்ணுவதனைச் சிலர் மாநிலங்கள் "அதிக" அதிகாரங்கள் (More powers) பெறுகின்ற அதிகாரப் போட்டியாகத் திரித்துக் கூறுவர். உரிய அதிகாரங்கள் என்பது மாநிலங்களுக்கு தங்கள் திட்டங்களை நிறைவேற்றப் போதுமான (reasonable and justificable rights) நியாயமான அதிகாரங்கள் ஆகும். மத்திய அரசினை விட "அதிக" அதிகாரம் உள்ளதாக மாநிலங்கள் இருக்க வேண்டும் எனக் கோருவதாக எண்ணக் கூடாது. We want due powers not more powers. அதிகாரக் குவியல்கள் பரவலாக்கப் பெறுதல் (Decentralisation) வேண்டும் என்பது தான் மர்நில சுயாட்சி. "சுயாட்சி" என்பதற்கு, தங்கள் மாநிலத்தின் இறைமைத் தன்மைக்கு (Sovereignity) ஊறு நேராமல், கூட்டாட்சி அமைப்பில் இருந்து கொண்டிருப்பது தான் பொருளே தவிர, சுதந்திரமான தனி அரசு (Independent Sepa-rate State) என்பதல்ல. இப்படித் தனித்த தன்மைகளோடு கூடிய மாநிலங்கள் பல, ஒரு மத்திய அரசின் கீழ் இயங்குவது தான் கூட்டாட்சியின் உண்மைப் பண்பாடு ஆகும். இவற்றினிடையே பூசல்கள் நேரிடா வண்ணம் உறவுக்குக் கைகொடுக்க வேண்டும். ஆனல் அதே சமயம் உரிமைகளுக்கு ஊறு நேருங்காலை உரத்த குரல் எழுப்பி 'உரிமைப் போராட்டம்" தவங்கவும் தயங்குதல் கூடாது.

எனவே தான், கலைஞர் அவர்களும் "உறவுக்கு கை கொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என முழங்கினர்.

அடிமை விலங்கொடிப்போம்

நல்ல உறவின் அடிப்படையில் ஒருங்கிணைந்து வாழ விரும்பும் பண்பு தான் தமிழனின் பண்பாட்டுச் சிறப்பாகும். ''எல்லோரும் சமம்'' என்ற சமத்துவமும் தமிழனின் எண்ணத்தில் உதித்ததுதான்! ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கணியன் பூங்குன்றனின் முழக்கம், என்றோ உலகின் செவிகளில் ஒலித்தது தானே! குடிசைகளிலும் கிராமங்களிலும் வாழும் கோடிக்கணக்கான தமிழர் தம் வாழ்வினைக் கொல்லும் வறுமைத் தளையினை அகற்ற வேண்டும் என்று தான் கம்பனும் அன்று, 'எல்லாரும் எல்லாச் செல்வமும் பெற்று இல்லாரும் இல்லை'' என்ற சமதர்மக் கோட்பாட்டை இக்குவலயத்தில் கூறிச் சென்றான். வறுமைத் தளை அகற்றும் பணியால் அடிமை விலங்கொடிக்கும் சமுதாயப் பணி நிறைவேறும்.

வறுமையினை ஒழித்து மக்கள் தம் வாட்டத்தினைப் போக்கிட மாநில அரசுகளுக்கு உரிய அதிகாரம் வழங்கிடுதல் மத்திய அரசின் கடமையாகும், இன்றேல் எதிர்காலம் இந்தியாவில் பல முஜிபுர்கள் தோன்ற இடங் கொடுத்து விடும்.

இந்திய அரசியல் நிலைமை

இந்தியாவின் அரசியல் கொந்தளிப்பு அனைத்திற்கும் மத்திய—மாநில உறவுகளில் உள்ள குறைபாடுகள் தான் காரணமாக இருக்கின்றது. மாநில அரசுகள் மதிக்கப் பட்டாலின்றி மத்திய அரசு மதிப்பினைப் பெறுதல் இயலாது. எதேச்சாதிகார முடிவுகள் மூலம் எல்லோரையும் எப்பொழுதும் பணியவைத்து விடல் முடியாது. சரித்திரத்தில் என்றும் பெரும் போராட்டங்களுக்கு மூல காரணங்கள் இந்த ஆதிக்க உணர்வும், உரிமைப் போராட்ட உணர்ச்சியுமே ஆகும். இதனை மத்திய அரசு மறந்தால் இந்திய சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கப் பெறும்.

மாநிலங்கள் உரிய அதிகாரம் பெற விழைகின்ற மாநில சுயாட்சிக் கோரிக்கை மூலம் மத்திய அரசு பலம் குறைந்து விடும்; மாநிலங்கள் இடையே பிணக்குகள் நேரும் பொழுது அலைவகள் சிதறுண்டு போகக்கூடிய அபாயம் நேரும் எனக் குறை கூறுபவர்களின் கூற்றில் நிலைமையைப் புரிந்து கொள்ளாத குழப்பம் தான் காணப்படுகிறது.

கோரிக்கையின் பின்னணி

"மாநிலத்தில் சுயாட்சி" என்று குரல் கொடுக்கும் போதே, "மத்தியிலே கூட்டாட்சி" என்ற பின்னணியோடு சேர்த்துத் தானே முழங்குகிறோம்.

இந்தியாவில் மாநில சுயாட்சி வேண்டுவோர்

மொழி வழி அடிப்படையில் அமைந்த மாநிலங்கள் முதலில் தங்களை தங்கள் மொழியின் அடிப்படையில் தமிழர்கள் என்றோ, ஆந்திரர்கள் என்றோ, குஜராத்தியர்கள் என்றோ, வங்காளிகள் என்றோ, மராட்டியர்கள்என்றோ அழைத்துக் கொண்ட பின்பே இந்தியர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர்.

இன்றைக்கு இந்தியாவின் எந்த மாநிலத்தவர்களுக்கும் முதலில் தங்களுடைய மாநிலப் பற்றும், பின்பே இந்திய தேசப் பற்றும் உள்ளது எனலாம். இந்த நிலையில் ஒவ்வொரு மாநில அரசும் தங்களுக்கென ஒரு இறைமைத் தன்மை (Sovereinity) உள்ளதாகவும், தங்களுக்கு வேண்டிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளத் தகுந்த அதிகாரங்கள் வேண்டுமென்றும் நினைக்கின்றன. இது மட்டுமின்றி வடக்கு தெற்கு என்ற பிரிவினைப் போக்கு அகில இந்திய கட்சிகளிடத்தும் உள்ளது.

காங்கிரஸ் கட்சியிலும் சரியே, சுதந்திரக் கட்சியிலும் சரியே, கம்யூனிஸ்டுக் கட்சியிலும் சரியே வடக்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்களின் குறிப்பாக இந்தி பேசுகின்ற மாநிலத்

தைச் சேர்ந்தவர்களின் ஆதிக்கமே மிகுந்துள்ளது. இது வெளிப்பார்வைக்கு புதிராகத்தோன்றினாலும் இந்திமொழி மூலம், இந்தியாவின் மற்ற மொழி பேசும் பகுதி மாநிலத்தவர்கள் என்றாவது ஒரு நாள் அடிமைப் படுத்தப்படுவார்கள் என்ற பயம் இந்திபேசாத மாநில மக்களிடையே நிலவி வருகிறது.

இப்படிப்பட்ட உள்நாட்டுச் சூழலில் அகில இந்திய கட்சிகளின் மாநிலப் பிரிவுகளின் தலைவர்கள் தங்கள் மாநிலத்தில் தனித்த, நிலையான செல்வாக்கைப் பெறவே முதலில் விரும்புகின்றனர். எனவேதான், மாநிலங்களின் அரசுகள் உரிய, தகுதியான அதிகாரங்களோடு இருக்க வேண்டும் எனப் பல அகில இந்தியக் கட்சிகளின் தலைவர்கள் விரும்புகின்றனர்.

தமிழகத்தில் பேரறிஞர் அண்ணாவும், இன்றைய முதல்வர் கலைஞர் அவர்களும் மட்டுமே இக்கருத்தினைக் கூறியவர்கள் என்பதாக எண்ணக் கூடாது. கேரளத்தின் முன்னாள் முதல்வர் E.M.S. நம்பூதிரிபாடு அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் எனக் கேட்டவர்தான். தனது மாநிலத்தின் அரிசிப் பற்றுக் குறையை, கேரளத்தின் மிளகை அன்னிய நாடுகளுக்கு கேரள மாநில அரசே ஏற்றுமதி செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு, அரிசியை இறக்குமதி செய்து கொள்ளும் அளவுக்கு உரிமை கேட்டவர் நம்பூதிரி பாடு அவர்கள். அதே மாநிலத்தைச் சேர்ந்த கேரள காங்கிரஸ் தலைவர் K.M. ஜார்ஜ் "Greater Autonomy" (மாநில சுயாட்சி) வேண்டும், அல்லா விடில் பெரும் போராட்டமே நிகழும் என்பதாகக் கூறியுள்ளார்.

மைசூர் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் விரேந்திர பாட்டில் அவர்களும் மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறுவதன் அவசியத்தைப் பற்றிக் கூறி வருகிறார். இந்தியாவில் ஆளுநர்களிலேயே நிர்வாகத் திறமை பெற்றவர் எனக் கருதப்படும் பழைய ஐ.சி.எஸ் காரரான ஆளுநர் தர்மவீராவும் இதே மாநில சுயாட்சிக் கருத்தைக் கொண்டவர்தான். மேற்கு வங்க இடது கம்யூனிஸ்டுகள் கூடத் தங்கள் தேர்தல்

அறிக்கையில் மாநிலங்கள் சுயாட்சி பெறுவதன் அவசியத்தைக் கூறியுள்ளனர்.

பஞ்சாப் மாநில நாடாளு மன்ற உறுப்பினர் நீலம் கௌர் அம்மையாரும், ஆந்திர மாநில நாடாளு மன்ற உறுப்பினர் கிருஷ்ணு அவர்களும் கூடத் தி.மு.க. கூட்டிய மாநில சுயாட்சி மாநாட்டிற்கு வருகை தந்து மாநிலங்கள் உரிமை .பெறுவதன் அவசியத்தைப் பற்றிப் பேசியுள்ளனர்.

முன்னாள் மேற்கு வங்க முதல்வர் அஜாய் முகர்ஜி அவர்கள் மாநில சுயாட்சி மாநாட்டில் கலந்து கொண்டு மாநிலங்கள் தகுந்த வலிமை பெற வேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பேசினர். அஸ்சாம் முதல்வர் சரத் சந்திரா அவர்களும் மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெற வேண்டுகிறார். இவர்கள் மட்டுமின்றி அகில இந்தியாவின் அறிஞர்கள் பலரும் மாநிலங்கள் உரிய அதிகாரம் பெறுவதைப் பற்றிக் கூறி வருகிறார்கள். அவர்களில் முக்கிய மானவர்கள், முன்னாள் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி கே. சுபபாராவ், அரசியல் சட்ட அறிஞர் கே. சந்தானம், முன்னாள் ஒரிசா மாநில முதல்வர் சிங்தேவ், தமிழக முன்னாள் முதல்வர் கு. காமராசர், இடது கம்யூனிஸ்டுத் தலைவர் பி. ராமமூர்த்தி, இந்தியாவின் பிரபல அரசியல் சட்ட நிபுணர் ஆர். சி. கூப்பர் ஆகியோர்களாவார்கள்.

இவ்வளவு அறிஞர் பெருமக்கள் மட்டுமின்றி மூதறிஞர் ராஜாஜி கூட 1967 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ந் தேதி 'கல்கி' இதழில் மாநில சுயாட்சிக் கோரிக்கையை வெகுவாக வரவேற்று எழுதியுள்ளார். இந்நிலையில் தமிழக அரசினை ஆளுகின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் மாநில சுயாட்சிக் கோரிக்கையினை எழுப்பி உரத்த குரலில் முழங்கி வருகின்றார். இந்தப் போராட்டத்தின் தளபதியாக கலைஞர் அவர்கள் எதிர்கால இந்திய சரித்திரத்தில் புகழ் பெறுவார் என்பது உறுதி.

இன்றைக்குத் தமிழகத்தை ஆளுகின்ற கட்சியான தி.மு.க. மட்டுமின்றி ஏறத்தாழ எல்லா அரசியல் கட்சிகளின்

தலைவர்களும் மாநிலங்கள் உரிய அதிகாரம் பெறுவதை வரவேற்கின்றனர். ஆனால் ஒரு சிலர் தேவையற்ற குழப்பத்தை இப்பிரச்சினையில் ஏற்படுத்தி வருகின்றனர்.

தமிழகம் இன்றைய தினம் இக்கோரிக்கையினை எழுப்புவதன் மூலம் பிரிவினை கேட்பதாகச் சிலர் கூறுகின்றனர் இந்திய அரங்கில், இந்தி பேசுகின்ற மாநிலத்தவர்கள் மட்டுமே மாநில சுயாட்சிக் கோரிக்கையினை இவ்வாறு பிரிவினைப் போக்குள்ளதாகச் சித்தரிக்கின்றனர்.

தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி. அவர்கள் மாநில சுயாட்சியைப் பற்றித் தீவிர அக்கறை காட்டும் தலைவர்களில் ஒருவராவார். தீந்தமிழில் அவருடைய மாநில சுயாட்சி பற்றிய கொள்கை விளக்கங்கள் மக்களை இவ்வுரிமைப் போரில் ஈடுபாடு கொள்ளச் செய்து வருகின்றது. திராவிடர் கழகத்தின் தனிப்பெருந் தலைவரும், பகுத்தறிவுப் பகலவனுமான தந்தை பெரியார் அவர்கள் மிகத் தீவிரமாக மாநிலங்கள் சுயாட்சி அடைவதை விரும்புகின்றவர் ஆவார்.

சிதந்திரக் கட்சித் தலைவர்களில் ஜி. சுவாமி நாதன் அவர்களும், உழைப்பாளர் கட்சியின் தலைவரான S.S. ராமசாமிப் படையாச்சி அவர்களும் மாநிலங்கள் சுயாட்சி பெறுவதை வரவேற்று தமிழக மேல்வையில் பேசியுள்ளார்கள். வலது கம்யூனிஸ்டுக் கட்சியினர் தங்கள் தேர்தல் அறிக்கையிலேயே மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெறுவதை வரவேற்று, "The constitutional Provision relating to centre-state relations should be amended to provide for more Powers to the state consistent with the basic unity of the country" எனக் கூறியுள்ளனர்.

இவ்வாறு, அகில இந்தியாவிலும் மாநில சுயாட்சிக் கோரிக்கை வலுத்து வருகின்ற ஒரு பெரும் இயக்க மாக உள்ளது. தமிழகத்தில் கலைஞர் அவர்கள் தளபதியாய் நின்று, ஏனைய மாநிலங்களின் ஒத்துழைப்பைத் தனது இப்போராட்டத்திற்குக் கோரி வருகிறார். எதிர்கால இந்திய

சரித்திரத்தின் பொன்னேடுகளில் பொறிக்கத் தக்க அரசியல் நிபுணராக அவர் இடம் பெறுவார் என்பது உறுதி.

மாநில சுயாட்சியினுல் விளையும் பலன்கள்

இந்திய அரசியல் சூழ் நிலையில் மத்திய அரசும், மாநில அரசுகளும் அமைந்துள்ள நிலையினை, சட்டங்கள் செய்யும் முறையினை, நாம் அவிழ்த்து விடப்பட்ட மாட்டிற்கும், கட்டப் பட்ட மாட்டிற்கும் உவமையாகக் கொள்ளலாம். அவிழ்த்து விடப்பட்ட மாடு எங்கு வேண்டுமானுலும் அலைந்து தனக்கு வேண்டிய பலனைப் பெற்றுக் கொள்ளும். எங்கு வேண்டு மானுலும் சுதந்திரமாகத் திரிய அதற்கு உரிமை உண்டு. ஆனல் கட்டப்பட்ட மாடு குறிப்பிட்ட வளையத்திற்குள்ளேயே உழல வேண்டி உள்ளது. அருகில் இருக்கின்ற புல்லைக்கூடக் கயிற்றை அவிழ்த்து விட்டாலன்றி மேய முடியாது. கயிற்றின் நீளமும், நெகிழ்வும் எப்படி உள்ளதோ, அந்த அளவுக்குத் தான் தனக்கு வேண்டிய புல்லை உணவாகப் பெற முடியும்.

இதைப் போன்று தான், மத்திய அரசுக்கும், மாநில அரசு களுக்கும், இடையே உள்ள உறவாகிய கயிறு சற்று நெகிழ்ந்து, நீண்டு மாநில அரசுகளுக்கு வேண்டிய உரிமை களை நல்காவிடில், மாநில அரசுகள் ஒரு குறிப்பிட்ட வளைவிற் குள் தங்கள் பலனை எதிர் பார்த்து நிற்க வேண்டி வரும். மத் திய அரசு நாட்டில் அவிழ்த்து விடப்பட்ட மாட்டின் உரிமை யைப் போல, எந்தப் பிரச்சினையிலும், உரிமைகளிலும் அதிகா ரத்தோடு தலையிடலாம். ஆனல் மாநில அரசுகள் அவ்வா றன்றி கட்டுப் பாட்டோடு செயலாற்ற வேண்டி உள்ளது. உரி மைகளை மாநில அரசுகள் மேற்கொள்ளும் பரப்பு மிகக் குறுகி யது எனவேதான் இச்சூழ்நிலையில் மாநில அரசுகள் தங்க ளுக்கு வேண்டிய சுயாட்சி முறையிலான உரிமைகளைப் பெற்று விட்டால் என்னென்ன பலன்கள் விளையுமெனக் காண்போம்.

பலவீனமான மாநில அரசுகளும், பலமான மத்திய அரசு சும் இந்தியாவில் ஒரு ஆதிக்க வர்க்கத்தினை (totalitarian

regime) மத்திய அரசில் ஏற்படுத்தாமல் மாநில சுயாட்சி பெறுவதன் மூலம் தடுக்கலாம். இதனால் ஜனநாயக முறை தழைக்கும். மக்களாட்சி மக்களின் நலன் பொருட்டு மக்களால் ஆளப் படுவதாக என்றைக்கும் நிரந்தரமாக நிலைத்து நிற்கும். இந்தி பேசுகின்ற பகுதி மக்கள் தாங்கள் பாராளுமன்றத்தில் பெற்றுள்ள முறையில்லாத பிரதிநிதித்துவத்தால், இந்தி பேசாத பகுதி மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த முடியாமல் செய்யலாம். இந்தியக் குடிமக்கள் அனைவரும் சட்டத்தின் கீழ் சமமான உரிமைகளைப் பெறுகின்ற வழியினை ஏற்படுத்த லாம்.

ஆரிய நாகரிகச் சாயல் படிந்துள்ள வடபகுதி மக்களும் திராவிட நாகரிகச் சாயல் படிந்துள்ள தென்பகுதி மக்களும் ஒரே இந்திய சமுதாயத்தினர் என்ற நிலையை அடைய வழி ஏற்படும். எல்லோரும் சமம் என்ற உணர்வு எங்கும் இருந்தி டின் தொல்லைகளும், துயரங்களும் ஏன் விளைந்திடப் போகின் றன?

மொழிகள் பலவும் தங்களுக்கு இயல்பாகக் கிடைக்கவேண் டிய உரிய நிலையினைப் பெற்றுத் திகழும். மொழிப் பூசலும் இனப்போராட்டமும், சமயப் பிணக்குகளும் இந்தியாவின் முன்னேற்றத்துக்குத் தடையாக நிற்காது.

இத்தகு பயன்கள் மட்டுமின்றி நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் வேகமான முறையில் ஏற்படும். மாநில சுயாட்சி யால் கிடைக்கின்ற மூன்று முக்கியமான பலன்களைப் பற்றிப் பார்ப்போம்.

1 பொருளாதார சுயாட்சியால், சுயாட்சி பெற்ற மாநிலங் களுக்கிடையே வளர்ச்சித் துறையில் போட்டி மனப் பான்மை (competition between various states) ஏற்படும். தலைமையில் நினைக்கின்ற எண்ணங்கள், அடி மட்டத்தில் செயல்களாக உருப்பெறும். மாநிலங்கள் பல போட்டி

மனப்பான்மையுடன் செயல் படுவதால் நிர்வாக ஊழல்கள் குறைந்து, வேகமான, சீரான நிர்வாகம் ஊக்குவிக்கப்படும். ஒவ்வொரு மாநிலத்தவர்களுக்கும் தங்கள் மாநில வளர்ச்சியில் அக்கறை ஏற்படும். தங்கள் மொழி, தங்கள் நாடு என்று பற்றின் காரணமாக நாட்டு மக்களிடையே ஒற்றுமையுணர்வு ஓங்குவதுடன், ஒழுக்கமான சமுதாய அமைப்பும், மேம்பாடான வாழ்க்கைத்தரமும் உயர்வடையும்.

2 பொருளாதாரத்தில் திட்டமிடுகின்ற துறையிலும் சூழ்நிலைகளுக்கேற்ப வளைந்து கொடுக்கின்ற (Flexibility in Eonomic Planning தன்மை ஏற்படும். நிறைவேறுத் திட்டங்களும், முதலீடுகள் இல்லாத தொழில்துறை எண்ணங்களும் இல்லாமல், நிலைமைக்கு ஏற்பத் தகுந்த பயன்களை அளிக்கின்ற திட்டங்கள் உருவாக வழி ஏற்படும். காந்தீயப் பொருளாதாரமான பத்தாம் பசலிப் பொருளாதாரத் திட்டமுமல்லாமல், அமெரிக்க நாட்டு அதிக அளவு முதலீட்டு பொருளாதாரத் திட்டமுமல்லாமல், மார்க்ஸின் சமுதாய அடிப்படைத் தீர்வான முறையில் திட்டங்கள் தீவிரமில்லாமலும், நமது நாட்டின் வசதிகளுக்கும், வாய்ப்புக்களுக்கும் ஏற்ப திட்டம் தீட்டுகின்ற முறை ஏற்படும். இதன் விளைவாகத் திட்டங்களின் பயன்கள் உடனுக்குடன் சமுதாயத்தின் அடிமட்ட மக்களைச் சென்றடையும். மக்களின் அன்றுடப் பிரச்சினைகள் பலவற்றுக்கு உடனுக்குடன் தீர்வு காண முடியும். விலைவாசி ஏற்றம், பற்றுக்குறை ஆகியவைகளை நிவர்த்திக்கலாம். சுருங்கக் கூறின் தேவைகளின் அடிப்படையில் திட்டங்கள் தீட்டப் பெற்றுச் சுயதேவைப் பூர்த்தியையும் தன்னிறைவையும் அடையலாம்.

3 தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் மிகத் துரித முன்னேற்றம் ஏற்படும். மத்திய அரசின் தொழில் அனுமதியில் (Permit and License) உள்ள குறைபாடுகள் நீக்கப் பெறும். தொழில் துறையில் மத்திய அரசிடம் உள்ள அதிகாரங்கள் பரவலாக்கப் படுவதால், மாநில அரசால் தொழில்களை உடனுக்குடன் ஆரம்பிக்க முடியும். இதனால் தொழில் பெருக்கமும், தொழில் வளர்ச்சியும் விரைவாக முன்னேறும்.

விவசாயத்துறையில் சிறு பாசனத் திட்டங்கள் போன்றவைகளை நிறைவேற்ற மத்திய அரசின் அனுமதி தேவையில்லாமல் இருந்தால், உடனுக்குடன் நிறைவேற்றிடலாம். எனவே, புதிய தரிசு நிலங்களை பாசனவசதிக்குட் படுத்தலாம். விவசாயத்துறையில் அறிவியல் முறைகளும், இயந்திரங்களின் உபயோகமும் ஏற்படும். இவைகளால் விவசாயம் விரைந்து முன்னேறும். நாடு முழுவதும் நிலச் சீர்திருத்தம் நன்கு நிறைவேற்றப்படும்.

மாநிலங்கள் தனித்தனியாக சுயாட்சி பெறுவதன் மூலம் ஒன்றிற்கொன்று உதவுகின்ற நிலைமை உருவாகி, மாநில அரசுகள் வலுவான உள் நாட்டு அமைப்புகளாக உருமாறும். மாநிலங்களுக்கிடையே உறவுகளைச் சீரமைக்கவும், தகராறுகளைத் தீர்த்து வைக்கவும் மத்திய அரசு வலுவாக உருப் பெற்றுத் திகழும்.

மாநில சுயாட்சியா? பிரிவினையா?

மாநிலத்திலே சுயாட்சி; மத்தியிலே கூட்டாட்சி என்று திராவிட முன்னேற்றக் கழகம், மாநில சுயாட்சிக் கோரிக்கையினை எழுப்புவதைக் கண்டு, ''தி. மு. க வின் இந்தக் கோரிக்கை பிரிவினை (Secession) எண்ணத்தைத் தூண்டுவதாக உள்ளது'' என்று குற்றம் சாட்டுகின்றனர் ஆனால் ''பிரிவினை என்பதற்கும், ''சுயாட்சி'' என்பதற்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாததாலேயே இக் குழப்பம் நேரிடுகிறது. பிரிவினை எண்ணம் கொள்வதற்கு 'சுதந்திரமான நாட்டை (Independent State) அடைகின்ற எழுச்சி வேண்டும். அப்படிப்பட்ட எண்ணமோ, கோரிக்கையோ சுயாட்சிக்கோரிக்கையில் இல்லை. ஓர் உண்மையான கூட்டாட்சித் தத்துவம் அதனுடைய நியாயமான அதிகாரப் பங்கீட்டிலேயே அடங்கியுள்ளது என்பதனை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இக் கருத்தை 'டைசி' (Dicey) என்பார் A true Federal Government is based on the division of Powers என்று கூறியுள்ளார். ஆக, கூட்டாட்சித் தத்துவம் நன்கு இந்தியாவில் செயல்படவும், மாநிலங்களுக்கு உரிய நியாயமான அதிகாரங்கள் பெறவும்தான், மாநில சுயாட்சிக் கோரிக்கை எழுப்பப்படுகிறது.

எனவேதான் கலைஞர் அவர்கள், சென்னையில் அண்ணா நகரில் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில், இந்தியாவின் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் முன்னிலையில்,

"இந்தியாவில் கூட்டாட்சித் தத்துவம் நன்கு செயல்பட, பிரிந்து போகும் உரிமையில்லாத வகையில் மாநிலங்களுக்கு உரிய அதிகாரங்கள் தேவை" எனக் கூறியுள்ளார்.

தி மு. க. வினரின் திராவிட நாட்டுக் கோரிக்கையை மனதில் கொண்டு, மாநில சுயாட்சிக் கோரிக்கை பிரிவினை எண்ணத்தைக் காட்டுகிறது என வீண் பழி சுமத்துகின்றனர். 'திராவிட நாடு திராவிடருக்கே' எனப் பிரிவினை கேட்ட போது கூட, அன்றையதினம் தேசப் பாதுகாப்புக்கு ஊறு நேர்ந்த போது, பேரறிஞர் அண்ணா அவர்கள், எந்தவித நிபந்தனையுமின்றி இந்திய அரசுக்கு ஒத்துழைத்தார். சீனப் படையெடுப்பின் போதும், பாகிஸ்தான் படையெடுப்பின் போதும் பேரறிஞர் அண்ணாவும், தி மு. கவும், இந்தியாவின் ஒருமைப் பாட்டை வலியுறுத்தியதைக் கண்ட எதிர்க்கட்சியினர் பாராட்டியுள்ளனர்; இதனை நாடு இன்னும் மறக்கவில்லை.

தி. மு. க வின் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் அன்பழகன் அவர்கள் ஒரு பேட்டியின் போது, "சிறிய நாடுகளை, பெரிய நாடுகள் ஆக்ரமிப்புச் செய்கின்ற எண்ணம் உள்ள உலகச் சூழலில், பிரிவினை எண்ணம் தமிழகத்துக்கு நல்லதல்ல" எனக் கூறியுள்ளார். பிறகு, தி. மு. கவும் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டது. அதைக் கண்ட எதிர்க் கட்சியினர், குறிப்பாக அன்றைக்குக் காமராசரைத் தலைவராகக் கொண்டு இருந்த காங்கிரஸ் கட்சியினர் கடுமையாகத் தாக்கிப் பேசினர்.

'கொள்கையில்லாத கட்சியினர்' என்று இந்திய ஒருமைப் பாட்டுக்காகக் கைவிட்ட கொள்கையினைக் கண்டு கேலி பேசினர். இன்றைக்கு அவர்கள் தி.மு.க.வின் மாநில சுயாட்

சிக் கோரிக்கை பிரிவினை எண்ணத்தை வளர்க்கின்றது. என்கின்றனர் உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தைப் புரிந்து கொண்டிருந்தால், இவ்வாறெல்லாம் கூறமாட்டார்கள்.

கூட்டாட்சித் தத்துவம் செயல் படுகின்ற நாடுகளிலெல்லாம் இப்பிரிவினை எண்ணம் இருந்ததும், பின்பு காலப் போக்கில் உண்மையான கூட்டாட்சி மலர்ந்ததாலும், அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டமையாலும், பிரிவினை எண்ணம் மறைந்ததை காண்கிறோம்.

இதனை, "There is always a fear of Secession in a Federal State, a problem Which does not at all arise in a Unitary State" (The Machinary of Government Ilyas Ahmad) என்று குறிப்பிடுவர்.

அமெரிக்கக் கூட்டாட்சியில் 1812ம் ஆண்டு வடக்கு தெற்குமாநிலங்களிடையே 'பிரிவினைப்போர்' (War of secession) ஏற்பட்டதையும் பின்பு இறுதியில் மாநிலங்களின் உரிமைகள் அங்கே நன்கு நிலை பெற்றதால், அமெரிக்க கூட்டாட்சியின் ஒற்றுமை காக்கப்பட்டதையும் சரித்திரம் தெளிவாகக் காட்டுகிறது. சமுதாயப் பாதுகாப்பினை எவ்வாறு அமெரிக்க நாட்டிலே செயல் படுத்துகிறார்கள், என்பதனை "A great deal of Cooperation between the Federal and State Governments has enabled the united states successfully to operate a social security scheme in which the general principles are determined by the Federal Government and the details and the administration are left to the states"—எனக் கூறுவார்கள். இவ்வாறு மாநில அரசுகளுக்கும் மத்திய அரசிற்கும் இடையே நல்லிணக்க உறவுகள் ஏற்பட்டதாலேயே அமெரிக்க குடியரசில் ஒற்றுமையுணர்வு ஓங்கியுள்ளது. எனவே தான் கலைஞர் அவர்கள் "இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு நேராமல் வலிமையான மத்திய அரசை உருவாக்க, மாநிலங்கள் சுயாட்சியினைப் பெறுவது அவசியம் எனக்கூறி வருகின்றார்.

வங்க விடுதலைப் போராட்டத்தில் இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு கலைஞர் தமிழக முதல்வர் என்ற நிலையிலும், மாநில சுயாட்சிப் போரில் இறங்கியுள்ளவர் என்ற நிலையிலும் எத்தகு சிறப்பான ஒத்துழைப்பை நல்கினார் என நாடு அறியும், பாதுகாப்பு நிதிக்கு தமிழக அரசு இந்திய மாநிலங்கள் அனைத்தையும் விட நிதியளிப்பதில் முன்னின்று அதிக நிதியினை அளித்துள்ளது. இவைகளெல்லாம் தி. மு. க. வின் ஒருமைப்பாட்டு உணர்வைக் காட்டவில்லையா? இந்தியாவின் ஒற்றுமையைக் காக்க தி.மு.கவினர் எத்தகுதியாகத்திற்கும் தயார் என்ற நிலையில் தான் இன்றைக்கும் உள்ளனர். ஆனால் தி.மு.க-வினர் சாமானியர்கள், என்பதாலேயே வகுப்பு வாதக் கட்சியினரும், பிற்போக்காளரும் இன்றைய தினம் சுயாட்சிக் கோரிக்கையைப் பிரிவினை எண்ணம் எனத் திரித்துக் கூறி வருகின்றனர். காலப்போக்கில் அவர்களே மாநில சுயாட்சிப் போரில் முன் நிற்பார்கள்.

உலகக் கூட்டாட்சியில் பிரிவினை உரிமை

இத்தகு பிரிவினை உரிமையினை உலகக் கூட்டாட்சிகளில் சோவியத் ரஷ்யாவின் அரசியல் அமைப்பில் நாம் பார்க்கிறோம். சோவியத் அரசியல் சட்டத்தில் பிரிவினை உரிமை உள்ளது. ஆனால் வழி முறைகள் கூறப்படவில்லை. (The Russian provision for secession is an empty form because no means are provided for securing secession (—The Indian Federal structure Sri Ram Sharma) இதைப்பற்றி "This provision seems to have been put in more as a Challenge to liberal democracies designed to show them that the Russian Government holds the various nationalities with the lightest of ties"—என்று கூறுவார்கள்.

அமெரிக்க நாட்டிலும் கூட்டாட்சி என்பது ஒப்பந்தம் போன்றதென்றும் பிரிகின்ற உரிமை வேண்டும் என்றும்

கூறி வந்துள்ளனர். (There were some in the United States who at one time seemed to assert that the Federation was a covenant which one of the parties could put an end to by its unilateral action—The Indian Federal structure) ஆனால் அமெரிக்க உள்நாட்டுப் போரில் பிரிவினை எண்ணம் முறியடிக்கப்பட்டது. சமீபத்தில் கூட மேற்கு ஆஸ்திரேலியா, ஆஸ்திரேலியாக்காமன் வெல்த்திலிருந்து பிரிந்து செல்ல பிரிட்டனுடைய பாராளுமன்றத்தை வேண்டிய போது பிரிந்துபோகின்ற உரிமை மறுக்கப்பட்டது. கனடாவில் சென்ற ஆண்டு ஒரு பகுதியினர் இவ்வாறே ஒரு கலகத்தை ஏற்படுத்தினர். ஆனால் அதுவும் வெற்றி பெற முடியவில்லை. அங்கும் பிரிவினை தடை செய்யப்பட்டுள்ளது.

இந்திய பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டது ஏன்?

மற்ற கூட்டாட்சிகளில் உள்ள பிரிவினை உரிமை இந்திய அரசியல் சட்டத்தில் இல்லை. அது மட்டுமல்ல, மற்ற கூட்டாட்சிகளில் உள்ளதைப் போன்று தனியாக மாநிலங்களுக்கு அரசியல் சட்டமும் இல்லை. (Like the constitutions of the United States, Switzerland, Canada and Australia the Indian Constitution does not permit Secession ..Unlike the regional units elsewhere, the states in India do not have separate Constitution of their own; their Constitutional structure is a part of the Constitution of India—The Indian Federal Structure) பிரிவினை உரிமையுள்ள கூட்டாட்சிகளில் பிரிவினையை விரும்புகின்ற எழுச்சி இல்லை. காரணம் அங்கே மாநிலங்கள் உரிய அதிகாரங்கள் பெற்று, தங்களுடைய சொந்தக் காலிலேயே நிற்பதால், பிரிவினைக்குத்தேவையும் இல்லை; அவசியமும் இல்லை. இங்கே, பிரிவினை உரிமை இல்லை. ஆனால் பிரிவினைக்கான காரணங்கள் உள்ளது. ஏனெனில் மாநிலங்கள் மீது மத்திய அரசு ஆதிக்கம் செலுத்துகின்றது.

இந்திய அரசியல் சட்டத்தினை உருவாக்கு முன்பு, கிரிப்ஸ் தூதுக்குழுவினர் கூட்டாட்சி அமைப்பை இந்தியாவில் ஏற்படுத்த திட்டங்கள் அளித்த போது-பிரிவினை உரிமையுள்ளதாகவே இந்திய மாநிலங்களை- அமைக்க நினைத்தனர், இறுதியில் ஆவ்வாறு அமைக்க முடியவில்லை.

("This weakness (Secession) would have been even more glaring in India had the cripps proposals of March—April, 1942 been accepted in this Country. They wanted to create an Indian Union with a right of Secession to any unit that wanted to get out of it, even through provision was also made for the 'accession' of such a state if it wanted to do so in the future. But this provision of Secession of confederation units was not a new experiment in India). —The Indian Federal Structure

இந்தியக் கூட்டாட்சி அமைப்பு பற்றிய சிம்லா மாநாட்டில் ஜின்னாவும் காந்தியும் மத்திய அரசுக்கு வெளியுறவும், பாதுகாப்பும் மட்டுமே போதுமானது. என்று ஒப்புக் கொண்டனர், பிரிவினை எண்ணம் கொண்ட ஜின்னா பாகிஸ்தான் பிரிவினையை ஏற்படுத்தக் காரணமாக இருந்தார். அதற்கு ஜின்னாவின் சமாதானம் இந்தியக் குடியரசில் இந்துக்கள், முஸ்லீம்கள் மீது ஆதிக்கம் செலுத்துவார்கள் என்பதுதான்.

இந்துக்கள் இந்திய நாட்டில் ஆதிக்கம் பெறவேண்டும் என்ற எண்ணம் அன்றைக்கு இந்தியாவில் சிலருக்கு இல்லை என்று கூற முடியாது. தேசபக்தியுள்ள சிலர் பாகிஸ்தான் பிரிவினையை வெறுத்த பொழுது கூட இந்துக்கள் ஆதிக்கம் உள்ள இந்தியாவே வேண்டும் என நினைத்தவர்கள் முஸ்லீம்களை ஒதுக்கி, ஒரு முஸ்லீம் தனிநாடு பிரிவினையை ஏற்படுத்தக் காரணமாக இருந்தனர். சென்னை மாநில முதலமைச்சராக இருந்தபொழுது, ராஜாஜி தனதுமாநில சட்டசபையில் பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றினர். இந்து சமய வெறியர்கள், இந்தியாவில் உள்ளவர்கள் எல்லாம்

இந்துக்களாக மாற வேண்டும் என்று எண்ணினர். இன்றைக்குக் கூட ஜனசங்கத்தினர் இந்து சாம்ராஜ்யம் என்ற பகற்கனவைக் கண்டு வருகின்றனர்.

ஜனசங்கத்தினரின் தலைவரான பால்ராஜ் மதோக் அவர்களின் Indianisation- என்ற புத்தகம், இத்தகைய இந்து சாம்ராஜ்ய எண்ணத்தையே வெளியிடுகிறது. இந்தியா ஒரு மதச் சார்புள்ள நாடு; சிறுபான்மையினரின் உரிமையினைக் காக்க அரசியல் சட்டரீதியாக பாதுகாப்பு உள்ளது என்று கூறுபவர்கள் எல்லாம் ஜனசங்கத்தினரின் Indianisation–இந்தியமயமாதல் என்ற கூற்றினை ஆராய வேண்டும். இந்து சமயத்தினர் தான் இந்திய நாட்டினர் என்றே ஜனசங்கத்தினர் நம்பி வருகின்றனர்.

சிம்லா மாநாட்டில் சுயாட்சி முறையில் மாநிலங்கள் அதிக உரிமையுள்ளதாக மத்திய அரசுக்கு வெளியுறவு,பாது காப்பு ஆகிய இரண்டு துறைகளுமே போதுமானவை என்று கூறிய அரசியல் அமைப்புக்கு ஒப்புக் கொண்ட ஜின்னு, பிறகு பாகிஸ்தான் பிரிவினையைக் கோருவதற்குக் காரணம், அன்றைக்கு இந்திய நாட்டில் ஆதிக்க வெறி கொண்டிருந்த இந்து சமய வெறியர்களும், இனத் துவேஷிகளுமே ஆவார்கள். ஆக, இந்திய — பாகிஸ்தான் பிரிவினை மூலம், ஆதிக்க வெறியும், அடிமைப்படுத்தப் படுவோம் என்ற பயமுமே பிரிவினைக்குக் காரணம் என அறிகின்றோம். ஒரு நாடோ அல்லது இனமோ மற்ற நாட்டவர்களால், இனத்தவர்களால் அடிமைப் படுத்தப் படுவோம் என்று உணரப்படும் பொழுது—பிரிவினை எண்ணம் தலை தூக்குகிறது. ஆதிக்க வெறி கொண்டவர்கள் பிரிவினை எண்ணம் வளரக் காரணமாக உள்ளனர்.

இந்திய நாட்டில் மட்டுமல்ல, உலகில், மனிதகுல வரலாற்றில், எங்குமே இதுதான் நிலைமை!

இனவழியால், மொழி வழியால், மதவழியால் அடிமை கொள்ள நினைப்பவர்கள் ஒற்றுமைக்கு உலை வைக்கிறார்கள்.

மனிதனின் இயல்பான உரிமை உணர்ச்சியை அடக்க உலகில் எந்த சக்தியும் இதுவரையில் இல்லை—இனிமேலும் இருக்க முடியாது! "மனிதர்கள் ஒருவரை ஒருவர் அடக்கியாள நினைப்பது கேவலமான, காட்டுமிராண்டித்தனமாகும்"-என்று கூறிய நேருவின் வழி வந்தவர்கள்—இன்றைக்கு இதனை மறந்த நிலையில்—தமிழகத்தின் சிறு கோரிக்கைகளைக் கூட ஏற்கமறுக்கின்றனர். அவர்களுக்கு, இன்றைக்கு உலகிலே வங்கதேசம் என்ற புதிய நாட்டின் உதயம் புதுத் தெளிவை ஊட்டட்டும்!

புதிய வங்கம்

புதிய வங்கதேசம் புத்தொளி பெற்று கிளம்பியதற்கு கிழக்கு பாகிஸ்தான் மீது, மேற்கு பாகிஸ்தான் கொண்ட ஆதிக்கமே காரணமாகும். "The vast differences between East and West Pakistan, the language question, the difference in the Cultural outlook of the people. the two wings and the diverse nature of their economic problems render a Cent—valised form of government unfeasible"

—Pakistan Times Dec-30, 1952.

கிழக்கு பாக்கிஸ்தான் மக்கள் பெரும்பாலும் முஸ்லீம் மதத்தவராக இருந்தாலும், வங்காள இனத்தவர்களாவார்கள். அவர்களின் தாய் மொழி வங்காளி மொழி ஆகும். மேற்கு பாக்கிஸ்தான் ஆதிக்க வர்க்கத்தினர் உருது மொழி பேசுகின்ற பஞ்சாபியர்கள் ஆவார்கள். முஸ்லீம் என்ற மதஉணர்வால் பிரிந்த பாக்கிஸ்தானில் இன உணர்வும், மொழியுணர்வும் அடிமைப் படுத்தப்பட்ட பொழுது, ஆதிக்கம் கொள்ளப் பட்ட போது, புரட்சி வெடித்தது. (In fact the demand for Bengali became the focal point of an emerging national identity in East Bengal).

West pakistan could not even agree to the acceptance of Bengali as one of the national languages of Pakistan. It was the will of the founder of Pakistan M. A. Jinnah, that

Urdu should be the only national language (The challenge of Bangla Desh—Pranchopra) சுதந்திர இயக்கம் மலர்ந்து, இன்றைக்கு உலக சரித்திரத்தில் ஒரு புதிய நாட்டின் உருவம் பொறிக்கப்பட்டு விட்டது.

வங்காள தேசம் மொழியுணர்வாலும் இன உணர்வாலும் உலகில் இன்றைக்கு ஒரு புதிய அரசாக உருவாகி விட்டது.

புதிய வங்கமும், மாநிலசுயாட்சிக் கோரிக்கையும்

இன்றைக்கு வங்காளதேசம் உருவாகக் காரணமாயிருந்த இந்திய அரசினர், தமிழகத்தின் மாநில சுயாட்சிக் கோரிக்கையினை வங்காள தேசம் உருவான கராணங்களுடன் ஒப்பிட்டுக் காணக் கடமைப்பட்டவர்கள் என்பதை மறுக்கக்கூடாது. வங்கத்தில் இருந்த இன, மொழி உணர்வுகள், இன்றைக்கு இந்தியாவில் இல்லை என்று கூற முடியாது. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மொழிவாரி அமைப்பு மாநில அரசுகளும் தனித்த சரித்திர நாகரிக வரலாறுகளைக் கொண்டதுடன், சிறப்பான மொழிக்கூறுகளையும் கொண்டுள்ளது திராவிட மொழிக் குடும்பமும், ஆரிய மொழிக் குடும்பமும், இன்றைய இந்திய மொழிகளின் இரு வேறு மூலங்களே என்பதை மறுக்க முடியாது. இவைகளையெல்லாம் விட ஆரிய, திராவிட இன நாகரிகம் கொண்ட கூட்டுக்கலவையாக இந்திய நாகரிகம் இருந்து வந்தாலும், இரண்டிற்கும் அடிப் படை வேற்று மைகளும், தனித்தன்மைகளும் உள்ளன என்ப தையும் நினைவில் கொள்ளவேண்டும்.

இவைகளின் அடிப்படையில் பார்த்தால், இந்தியாவில் உள்ளவேற்றுமைகளும், அவற்றின் இடையில் நாம் கண்டுள்ள ஒற்றுமையும் விளங்கும்.

மொழியுணர்வு தீவிரமாக உள்ளது. வடக்கு, தெற்கு என்ற மனப்பான்மை இன்றுள்ளமைக்கு காரணம் இதுவே ஆகும்.

வடக்கு வளர்கிறது, தெற்கு தேய்கிறது என்ற எண்ணம் தென்பகுதி மக்களிடையே உள்ளது. இந்திய தேசிய கட்சிகள் குறிப்பாக காங்கிரஸ் வடக்கத்தியர்களின் ஆதிக்கத்தில் உள்ளதால் தென்பகுதி மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, அவர்கள் வடக்கத்தியர்களின் ஆதிக்கத்தில் உள்ளனர் என்ற கருத்து நிலவுகிறது.

(There is at present in this area (south) a strong feeling against the north, the feeling that "today congress is guided by the people in the north and that gives little or no scope for safe guarding the interest of the South—INDIA—The quest for Nationhood.)

—Edward D'Cruz

எனவே, வடக்கத்தியர்களின் ஆதிக்க உணர்வினை அறிந்த தென் பகுதி காங்கிரஸ்காரர்கள், இந்திய யூனியனில் இருந்து பிரிய வேண்டும் என்ற எண்ணத்தைப் பரப்பி வந்தனர்.

In free Dravidasthan Congress as a body can shape plans to serve the people. I appeal to all congressmen to get themselves freed from the centre so that they can be of greater service to the masses—A. S. Venu, the Dravidasthan propagandist—The quest for Nation hood.

அகில இந்தியக் கட்சியினர்களிடையே கூட வடக்கத்தியர்களின்—குறிப்பாக இந்தி பேசும் மாநிலத்தவர்களின் ஆதிக்கம் இந்திய அரசியலில் உள்ளது எனத் தெளிவாக அறிகிறோம்.

இனவழியிலும், மொழி வழியிலும் மற்றவர்களை அடக்கியாள நினைக்கின்ற மனப்பான்மை இன்றைய தினம் இந்தி பேசும் மாநிலத்தவர்களிடையே வளர்ந்து வருகிறது. இது இந்திய ஒருமைப்பாட்டுக்கு உரத்த குரலில் விடப்படும் சவாலாகும்!

அவர்களுடைய ஆதிக்க உணர்ச்சி மறையா விட்டால், இந்தியா என்ற பெயர் வெறும் பூகோளப் பெயராகத்தான் இந்தத் துணைக் கண்டத்திற்கு இருக்கும்.

இத்தகு அடிமைப் படுத்த நினைக்கும் எண்ணமுள்ளவர்கள் மாநில சுயாட்சிக் கோரிக்கையினைப் பிரிவினை வாதமாகச் சி காட்டுகின்றனர்!

ஜனநாயகம் என்ற பெயரில் பெரும்பான்மை என்ற திமிரில் எதை வேண்டுமானாலும் செய்யலாம்—எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம். அதற்கு உரிமை உண்டு என வடக்கத்தியர்கள்—இந்தி பேசுவோர் நினைத்தால் இந்திய ஒருமைப்பாடு வெறும் பகற்கனவாகத்தான் இருக்கும்!

இந்திய நாட்டில் இன்றைக்கு ஒரு பெரும் ஆதிக்க வர்க்கம் மத்தியிலே வளர்ந்து வருகிறது. இந்திய துணைக்கண்டத்தில் நாசிசமும் (Nazism) பாசிசமும் (Fascism) வளர்ந்தோங்கி வருகிறது!

உலக சரித்திரத்தில் ஆதிக்க வர்க்கத்திற்கு என்றுமே வெற்றி கிட்டியதில்லை! மாநில சுயாட்சிக் கோரிக்கை அரசியல் சட்டப் பிரச்சினை, கூட்டாட்சி அமைப்புத் தத்துவப் பிரச்சினை ஆகும். இதனை உணராமல், ஆராயாமல் 'மாநில சுயாட்சி' என்றவுடனேயே பிரிவினைக் கோரிக்கை எனக் குற்றம் சாட்டுகின்றனர்.

தி.மு.க. கழகம் திராவிட நாடு கேட்ட பிரிவினை இயக்கமாக முன்பு இருந்தது உண்மை தான். ஆனால், நாட்டைப் பிரித்தவர்கள் ஆதிக்க உணர்வு படைத்த காங்கிரஸ்காரர்கள் தான் என்பதை நாடு மறக்கவில்லை, தி. மு. க. இன்றைக்குப் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு இந்திய அரசியலில் கூட்டாட்சித் தத்துவம் நிலைபெற, இந்தியா ஒற்றுமையோடு திகழ மாநில சுயாட்சியைக் கேட்கிறது.

மேலும், பிரிவினைத் தடைச் சட்டமும் அமுலில் உள்ளது. பிரிவினை கேட்க வேண்டிய அளவுக்கு சங்கடங்கள் நிரம்பியதாக இந்திய அரசியல் சூழல் இல்லை. எனவே, பிரிவினை தேவையற்றது என்று தான் தி மு.க. திடமாக நம்பியுள்ளது.

கலைஞர் அவர்கள் தி. மு. க. வின் மாநில சுயாட்சிக் கோரிக்கை பிரிவினையை அடிப்படையாகக் கொண்டதல்ல என்று ராஜபாளையம் மாநாட்டில் உரை நிகழ்த்தியுள்ளார்.

''எங்களைத் தவறான முறையில் பிரிவினைவாதிகள், பிரிவினை வாதிகள் என்று சொன்னால்—அது பயங்கரமான குற்றம்! எங்கள் மீது சுமத்தப்படுகின்ற பயங்கரமான பழி! பிரிவினை வாதம் பேசுவது சட்டப்படி குற்றம் அந்தக் குற்றத்தை நாங்கள் செய்கிறோம். என்று கூறினால் நாங்கள் அப்படிக் குற்றவாளிகள் அல்லர் நாங்கள் நிரபராதிகள் என்று எங்களை ஆக்கிக் கொள்ள ஒரேவழி எங்கள் மீது வீண்பழி சுமத்தியவர்களை கோர்ட்டிலே நிறுத்துவதுதான்— வேறு வழியில்லை; அதுதான் முறை என்றால் அந்த முறையை தி. மு. கழகம் நிச்சயமாகக் கடைப்பிடிக்கும்'' என்று கலைஞர் கூறியுள்ளார்.

அரசியல் சட்ட வழியில் பெறவேண்டிய உரிமைகளை மாநிலங்கள் பெற்றால் தான் இந்தியக் கூட்டாட்சி அமைப்பு நிலைத்து நிற்கும். அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தபின்பு மாநிலங்களிடையே பிரிவினைப்போக்கு அதிகமாக உள்ளது.

(......India is moving towards an Unitary state but in actual fact, the states are today more separated from one another in thought and feeling than at the commencement of the Constitution—Prof. J. Franco Lectures.

—K. Santhanam.

இந்நிலைக்குக் காரணம் மாநிலங்கள் தகுந்த வலிமையில்லாமலும், அதே சமயம் மத்திய அரசு மிகுந்த வலிமையோடு இருப்பதும் தான். மத்திய அரசில் மேலும் அதிகாரங்கள் குவிக்கப்படுவதால் மாநிலங்கள் வலிவிழந்து விடுகின்றன.

எனவே, அவைகள் தங்களுக்கு வேண்டிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் மத்திய உதவியினை நாடுகின்றன. அப்பொழுது சமமான பங்கீட்டு முறை இல்லாததால் மாநிலங்களிடையே போட்டி மனப்பான்மை ஏற்படுகிறது. இதனால் கசப்புணர்வும், காழ்ப்பும் ஏற்பட்டு குறுகிய பற்றுக்கள் கிளர்ந்தெழுகின்றன. விளைவு? பிரிவு உணர்வும் ஒற்றுமையின்மையும். எனவேதான், இந்தியாவின் ஒற்றுமைக்கு மாநிலங்கள் உரிய அதிகாரங்கள் பெறுவதே தகுந்த வழியென பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிச் சென்றார். அதற்கொப்பவே கலைஞர் அவர்கள் இன்றைய தினம் தளபதியாக நின்று மாநில சுயாட்சிபெறப்பாடுபட்டு வருகிறார். மாநிலங்கள் சுயாட்சி பெறுவது இந்தியாவின் ஒற்றுமைக்கு அவசியம். தி.மு.கழகம் இந்தப் பணியில் இறுதியில் வெற்றி பெற்றே தீரும்.

மாநில சுயாட்சி ஒருமைப் பாட்டுணர்வை வளர்க்குமா?

இந்தியாவென்னும் மலர்த்தோட்டம், பல வண்ண மலர் படுக்கைகளைக் கொண்டது. ஒவ்வொரு வண்ண மலர்ப்படுக்கைக்கும் ஒரு தோட்டக்காரன் இருக்கிறான். அவர்கள் தோட்டம் முழுமையிலும் கொள்ளும் ஆர்வத்தைவிட, அக்கறையைவிடத் தங்கள் தங்கள் மலர்ப் படுக்கையின் மீதே பற்று கொண்டுள்ளனர்.

பல தோட்டக்காரர்களின் ஒத்துழைப்பால், கூட்டால் ஒரு தோட்டம் உருவாகி உள்ளது. இதுதான் இந்தியா. பல இனங்கள் பல மொழிகள், பல் வேறுபட்ட மதங்கள், ஜாதிகள் மற்றும் கலைகள், நாகரிகங்கள் ஆகிய இவைகளின் கலப்புதான் இந்தியப் பெருநாடு. என்றுமே இந்திய நாடு என ஒற்றுமைப்பட்ட உருவாக ஒன்று இருந்ததில்லை. இந்தியா என்பதே

இல்லை எனக் கூறுவோரும் உளர். (There is the first and most essential thing to learn about India—that there is not and never was an India, or even any Country of India, possessing, according to European ideas, anysort of unity, physical, Social or religious; no Indian nation,no 'people of India of which we hear so much–INDIA Its Administration and Progress-Sir John Strachey)

இந்தியா என்ற நாடே இல்லையா? இது என்ன புது கட்டுக் கதை என்று எண்ண வேண்டாம்! இந்தியா என்ற ஒரு நாடு இல்லையென்றால் ஒரேநாடு என்ற உள்ளமைப்பு இல்லை. வெறும் வெளித் தோற்றம் தான் என்பது பொருள். அதாவது பல நாடுகளையும், மொழிகளையும் உள்ளடக்கிய ஒரு பூகோளப் பெயர்தான் இந்தியா என்ற பதமாகும்.

(The nation that India is a nationality rest upon that Vulgar error which political Science principally aims at eradicating. India is not a political name, but only a gegrophical expression like Europe or Africa. It does not mark the territory of a nation and language but the territory of many nations and many languages—The Expansion of England, Sir John–seely).

பல மொழிகள், பல இனங்கள் என்ற இவைகளின் அடிப்படையில் பல்வேறு நாகரிகங்கள் பண்பாடுகள் இந்தியாவின் பல்வேறு நாட்டினருக்கும் சொந்தமானது. இவைகளின் அடிப்படையில் அவர்கள்வேறு படுகின்றனர். (From the point of View of tradiors and Culture too, India is disunited Prof. E. Asirvatham.) மகாத்மா கந்தியும், பண்டித நேருவும்கூட இந்திய நாகரிகம் கலவை நாகரிகமே என்று கூறுகின்றனர். (Indian Culture is neither Hindu, Islamic not any other, wholly. It is a fusion of all-The Discovery of India-Jawaharlal Nehru)

இப்படிப்பட்ட வேற்றுமைகள் நிறைந்த ஒருநாடு சுதந்திரம் அடைந்த பின்பு, ஒற்றுமை காண விரும்பியது. ஒரே நாடு, ஒரே மொழி என்ற தத்துவத்தை உருவாக்க முனைந்தனர். தங்களிடையே இருந்த வேற்றுமைகளில் ஒற்றுமை காண முற்படுவதைவிடுத்து (Unity in diversity) வேற்றுமைகளை மறந்து ஒற்றுமை காணமுற்பட்டனர். பலதரப்பினருக்கு உரிய தகுதியை உணர்ந்து மதித்து ஒற்றுமை காண விரும்பாமல், ஒரே தரப்பிலேயே ஒற்றுமை என்றபெயரில் ஆதிக்கம் கொள்ளத்தலைப்பட்டனர். தேசிய ஒருமைப்பாடு ஒரு குறிப்பிட்ட இனத்தவரின் சாம்ராஜ்யக் கனவில் சென்று முடிந்தது. எனவேதான் பிரிவினை ஏற்பட்டது.

இந்தியாவின் வேற்றுமைகளைப் பயன்படுத்தியே வெள்ளையர்கள் நம்மை ஆண்டனர் என்பது மிக உண்மைதான்.

(Divide it impera was the old Roman motto, and it should be ours - Lord Elphinstone, Governor of Bombay 1859.)

இப்படிப் பிரித்தாளும் தந்திரம் வெற்றி பெற்றமைக்கு இங்கே இருந்த வேற்றுமைகள்தான் காரணமாகும். பிரிவுகளை நிலைநாட்டியே, இந்தியாவின் வேற்றுமைகளை பயன்படுத்தியே நம்மை ஆண்டனர் வெள்ளையர்கள்.

(Our endeavour should be to uphold in full force the (for us fortunate) separation which exists between the different religions and races, not to endeavour to amalgamate them Divide it impera should be the principle of the Indian Government-Lientenant Colonel Coke)

இவ்வாறு இந்தியாவை வெள்ளையர்கள் ஆட்சி செய்கின்ற நிலைமை ஏற்பட்டமைக்கு இங்கே இருக்கின்ற வேற்றுமைகள் தான் என்று வாதிடுவார்கள் ஒரு சாரார். ஆனல் அவர்கள் ஒன்றை மறந்துவிட்டனர். அதாவது இந்தியாவில் இருந்த பல்வேறு நாட்டினரும் தங்களுள் ஒரு

வரை ஒருவர் மதிக்கவில்லை; வலிமை வாய்ந்த ஒரு பகுதியினர் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த முயன்று, அதன் காரணமாகத் தங்களுட் பகையை வளர்த்த வண்ணமாகவே இருந்தனர். அவர்கள் தங்களுள் ஒருவரை ஒருவர் மதித்து வாழ்ந்திருந்தால், ஆதிக்க உணர்வு அவர்களிடையே இல்லாமல் இருந்திருந்தால், இந்தியா அடிமைப் பட்டிருக்காது. இது சரித்திரத்தின் தோலுரித்த உண்மை.

இங்கேதான் தி. மு. கழகம் எழுப்புகின்ற மாநில சுயாட்சிக் கோரிக்கையும், இந்திய ஒருமைப்பாடும் பரிசீலனைக்கு வருகிறது.

இந்தியாவின் வேற்றுமைகள், வரலாறு, பண்பாடு, மொழி, இனம் மற்றும் மதங்கள் இவைகளைப் பின்னணியாகக் கொண்ட தென்பது மறுக்கமுடியாத, மறக்கமுடியாத உண்மையாகும். ஆனால் இந்தியக் கூட்டாட்சி என்ற அமைப்பில் அதன் உறுப்புக்கள் எவ்வாறு இயங்க வேண்டும்?

முதலில் தங்கள் வேற்றுமைகளுள் ஓர் ஒற்றுமையைக் காண முற்படவேண்டும். அதில் எல்லோரும் சம உரிமையோடு, ஆதிக்க உணர்வு இல்லாமல் அங்கம் வகிக்க வேண்டும். ஜனநாயகம் என்ற பெயரில் சிறுபான்மையினர் நசுக்கப்படக் கூடாது. ஒரு பகுதியினர், இனத்தவர், மொழிக்காரர்கள் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருக்க முயல வேண்டும்.

இரண்டாவதாக பொருளாதார சுதந்திரமும், தன்னிறைவும் இந்தியாவில் சரிசமமான பங்கீட்டைப் பெற்று, வளர்ச்சி பெற வேண்டும். அதற்காக மாநில அரசுகள், மத்திய அரசால் பாரபட்சமில்லாமல், மாற்றுந்தாய் மனப்பான்மை இல்லாமல் நடத்தப்பட வேண்டும்.

இதுதான் வேற்றுமையில் ஒற்றுமை. இந்தியக் கூட்டாட்சி அமைப்பில் நாம் அடைய வேண்டிய லட்சியம்.

ஆனால் இன்றைக்கு இந்தியாவில் அரசியல் எங்கு சென்று கொண்டிருக்கின்றது? தங்கள் வேற்றுமைகளை மறந்துவிட்டு ஒரே நாடு என்ற உணர்வோடு உள்ளனரா என்றால், "இல்லை" என்றுதான் பதில் கூறவேண்டி வரும்!

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் தீய சக்திகள் என்ன? இந்திய அரசியல் எதைப் பின்னணியாகக் கொண்டு இயங்குகிறது என்ற இரு கேள்விகளுக்கு நாம் விடைகாணுதல் அவசியமாகும். அப்பொழுதுதான், மாநில சுயாட்சிக் கோரிக்கையை இந்திய ஒருமைப்பாடு என்னும் விளக்கொளியில் புரிந்துகொள்ள முடியும்.

பேராசிரியர் ஹுமாயூன் கபீர் தமது, "இந்திய வரலாறு—சில படிப்பினைகள்" என்ற நூலில் "மக்கள் பல பிரிவுகளாகக் காணப்படுகிறார்கள். அவர்களுடைய நம்பிக்கைகளும், கொள்கைகளும் தனித்தனியாக இருக்கின்றன. அவர்களுடைய அறிவும், வளர்ச்சியும் எந்த அளவில் இருக்கின்றனவோ அதையொட்டி இந்த நம்பிக்கைகளும், கொள்கைகளும், அமைந்துள்ளன. இத்தகைய நிலை இருப்பதால்தான் இந்தியா ஒற்றுமையைத் தனது லட்சியமாகக் கொண்டிருந்தும், இந்த நாட்டில் தேசிய ஒருமைப் பாடும் ஒற்றுமை உணர்வும் ஏற்படாத நிலை பன்னெடும் காலமாக இருந்து வருகிறது" என்று குறிப்பிடுகின்றார்.

நாட்டில் ஒருமைப்பாடு உணர்வு ஏற்படாமைக்கு மக்களுடைய அறிவும், வளர்ச்சியின்மையுமே காரணம் என்று பேராசிரியர் குறிப்பிடுவது இங்கே கவனிக்கத்தக்கது.

மக்களின் அறிவும், நம்பிக்கையும் தான் அரசியல் அமைப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆங்கிலத்தில் "People get the Government they deserve" என்று கூறுவார்கள். அரசியல் நன்கு அமையாவிடில், வளர்ச்சி எவ்வாறு ஏற்படும்? எனவே, இவையிரண்டும் இல்லாமையாலே, மக்கள் தங்கள் சொந்த நலன்களைக்கருதுகின்றனர். இதனால் தனிப்பட்ட அக்கறைகள் உருவாகின்றன. இவைகளே இனவேறுபாடு, மொழி

ஆதிக்கம், மதப்பூசல் என்று பரிமளிக்கின்றன. ஒரு பகுதியினர் மற்றவர்களை ஆதிக்கம் கொண்டு, தாங்கள் வாழ நினைக்கின்றனர். எனவே வேற்றுமைகள் வெறுப்பு கலந்த வேற்றுமைகளாகி ஒற்றுமை ஏற்பட முடிவதில்லை. தேசிய ஒருமைப்பாட்டுணர்வும் பாழாகிறது. இதனைப் போக்கி நாட்டை வளம் பெறச் செய்ய என்ன செய்ய வேண்டும்?

இந்தியாவின் எல்லாப் பகுதி மக்களும் சமமான உரிமை பெற்று, அறிவு வளம் பெறவேண்டும். பொருளாதார வளர்ச்சி காணவேண்டும். மாநிலங்கள் எல்லாம் உரிய பங்கினைப் பெற்று, சமவளர்ச்சி காண வேண்டும். அப்பொழுதுதான் சமத்துவம் ஓங்கும். இந்திய ஒருமைப் பாடும் நிலை பெறும். மாநிலங்கள் எல்லாம் நன்கு வளர்ச்சி பெறவேண்டுமானால், மாநில அரசுகள் திட்டங்களை நிறைவேற்றிட தகுந்த அதிகாரங்கள் கொண்டிருத்தல் வேண்டுமல்லவா? அதற்காக மாநில அரசுகளுக்கு தகுந்த அதிகாரங்கள் அளிக்க வேண்டும். மாநில அரசுகள் தகுந்த வளர்ச்சியுற்று வலிமை பெறுவதன் மூலம், வலிமையான மத்திய அரசு உருவாகும். வலிமையான மத்திய அரசும், வலுவுள்ள மாநில அரசுகளும் ஏற்பட்டாலேயே இந்திய ஒருமைப்பாடு என்பது சாத்தியமாகும். இல்லாவிடில் இந்திய ஒருமைப்பாடு பகற் கனவாகவே முடியும்!

மாநில சுயாட்சிக்கு இந்திய அரசியல் சட்டத்தில் மாறுதல் பெறவேண்டிய பகுதிகள் எவைகள்?

இது காறும் மாநில சுயாட்சிக் கோரிக்கையின் பல்வேறு பிரச்சினைகளைப் பார்த்தோம். அரசியல் சட்டத்தில் மாநிலங்கள் சுயாட்சி பெறும் வகையில் சீர்திருத்தங்கள் செய்ய நாம் பாடுபட வேண்டும். அப்படி சட்டத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டிய பகுதிகளாக எவை, எவை உள்ளன எனக் காண்போம்.

இந்தியக் கூட்டாட்சியில் கூட்டாட்சியின் பண்புகளை விட ஒற்றை ஆட்சியின் (Unitary Government) பண்புகளே மிகுந்துள்ளன. வேற்றுமைகள் நிறைந்த இந்திய நாட்டில் ஒற்றை ஆட்சி முறை சாத்தியமில்லை. (For a big Country like India Consisting of large and thickly populated regions with different histories, languages, Cultures and traditions, Unitary Government is neither practicable nor desirable—The Indian Constitution—promise and performance) எனவே கூட்டாட்சியின் உண்மையான பண்புகள் நிறைந்ததாக இந்திய அரசியல் சட்டம் உருமாற, தேவையான சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். அதற்காக, அரசியல் சட்டத்தில் தடைக் கற்களாக உள்ள பகுதிகளை நீக்க வேண்டும். சிலவற்றை மாற்றியமைக்க வேண்டும்.

மத்திய--மாநில உறவுகள் சீர்கேடு அடைய முக்கிய காரணமாக உள்ளவைகள் 'நெருக்கடிகால அதிகாரங்களே'' (Emergency Provisions-Part XVIII) ஆகும் மக்களின் அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) காக்கப்பட நெருக்கடி கால அதிகாரங்களைக் கட்டுப் படுத்த வேண்டும். (If the Fundamental Rights are to have any reality for the future, immediate steps will have to be taken to limit the duration and scope of the Articles of part XVIII containing emergency provisions—The Indian constitution—Promise And Performance—K. Santhanam). வெறும் அரசியல் குரலாக மட்டும் கருதாமல், நாட்டில் உள்ள அனைவரும் இதனை மாற்ற வேண்டிய முயற்சிகளில் ஈடுபடுதல் ஜனநாயகத்தைக் காப்பதற்கான வழியாகும். (This is a matter which requires the immediate attention, not only of the politicians but also of all intelligent citizens who want to secure the future of democracy in this country.)

இந்தியக் கூட்டாட்சி அமைப்பினையே கேலி செய்வதாக உள்ளது இந்த அவசர காலச் சட்ட விதிகள்.

(In some-respects, the emergency provisions of Part XVIII of the Constitution are calculated to make a mockery of the Indian Federal Structure—K. Santhanam.)

இந்த அவசர காலச் சட்ட விதிகள், (Part X VIII-ல் பிரிவு 352, 354, 356, 357, 360).

மத்திய அரசினை எஜமானனாகவும், மாநில அரசுகளை வேலைக்காரனாகவும் ஆக்கியுள்ளது. மத்திய அரசாகிய எஜமானன் விரும்புகின்ற வரைதான் மாநில அரசாகிய வேலைக்காரனுக்குப் பணியாற்ற வாய்ப்பு உண்டு. எஜமானன் விரும்பினால் எப்பொழுது வேண்டுமானாலும் வேலைக்காரனை விரட்ட முடியும். அது போலவே, மத்திய அரசு மாநில அரசுகளைக் கவிழ்க்க முடியும் என்பது நடை முறையில் நாம் பல முறை கண்ட உண்மை.

1951-ம் ஆண்டு ஜுன் 21ந் தேதி பஞ்சாப்மாநில அரசை, டாக்டர். கோபி சந்த் பார்க்காவாவின் ராஜினமாவிற்குப் பின் ஜனதிபதி பிரிவு 356-இன்படி கலைத்தார். 1953-ம் ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4-ந் தேதி ஐக்கிய முன்னணியினரின் அமைச்சரவை, பட்டியாலா மற்றும் கிழக்கு பஞ்சாப் மாநில அரசுகளை ஆண்டு கொண்டிருந்தபோது (Ministry of the United Front Party in the State of Patiala & East Punjab States Union) ஜனதிபதி பிரிவு 356 இன்படி அந்த அமைச்சரவையினைக் கலைத்தார். ஆந்திராவில் 195 ம் ஆண்டு நவம்பர் 15 ந் தேதி பிரகாசம் அமைச்சரவையும் இதே கதிக்குள்ளாகியது. இவைகள் மட்டுமல்ல. கேரள மாநிலத்தில் இந்த 356 பிரிவு விளையாடிய திருவிளையாடல்கள் ஏராளம். மிகப் பச்சையான ஆட்சிக் கவிழ்ப்பும், ஜனநாயகக் கொலையும் கேரள மாநிலத்தில் நடத்தப்பட்டன. இன்றைக்கு கேரளத்தில் ஜனநாயகத்தில் நம்பிக்கையற்றவர் தொகை பெருகக் காரணமே, இப்படி அவசர கால தடை உத்திரவுகளின் மூலம் அமைச்சரவைகள் அங்கே கவிழ்க்கப்பட்டது தான்.

கேரளத்தில் 1959-ம் ஆண்டு ஜூலை 31—ந் தேதி பிரிவு 356 இன் படி இ எம். எஸ். நம்பூதிரிபாட்டின் கம்யூனிஸ்ட் அமைச்சரவை கலைக்கப்பட்டது கடுமையான கண்டனத்திற்கு ஆளாகியது. (The issue of this proclamation was Commented upon very severely not only by the Communists but by a number of independent persons in the House of the people—Grave Emergency And Emergency Arising out of the Failure of the Constitutional Machinery in a State—M. C. Setalvad).

ஒரிசாவில் டாக்டர் மெகதாப் தலைமையின் கீழ் செயல் பட்டு வந்த காங்கிரஸ் ஜனதந்திர பரிசத் (Congress—Gana tantra Parishad) 1961ம் ஆண்டு ஜனவரி 25 ந் தேதி கவிழ்க் கப்பட்டது.

மீண்டும் கேரளத்தில் 1964 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் காங்கிரஸ் அமைச்சரவை செல்வாக்கு இழந்தவுடன், 356 பிரிவு உபயோகப்பட்டது. இம்முறை 1965ல் தேர்தல் நடந்து முடிந்த பின்பும் நெருக்கடி நிலைமை அகற்றப்படவில்லை.

1959-ம் ஆண்டு கேரளத்தில் ஜனாதிபதி ஆட்சிப் பிரகடனம் செய்யப்பட்ட வரலாறு இந்திய ஜனநாயகத்தின் குரல் வளையை நெறித்த கொடிய செயலாகும். 1957-ம் ஆண்டு கம்யூனிஸ்ட் அமைச்சரவை கேரளத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், கல்விச் சீர்திருத்தத்தை அமுல் படுத்தியது. அதனை ஏற்றுக் கொள்ளாத கத்தோலிக்க மதபீடம் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தது. இதனால் கம்யூனிச அமைச்சரவை பதவிக்கு வந்த ஒருவாரத்திற்குள் மாநிலத்தில் பாதுகாப்பின்மை நிலவுவதாக காங்கிரஸ் பொதுச்செயலாளருக்குப் புலப்பட்டது. எனவே, காங்கிரஸ்கட்சியும், பி.எஸ்.பி.யும் சேர்ந்து ஒருபெரும் கிளர்ச்சியை, அரசியல் சட்ட முறைகளுக்கு அப்பாற்பட்ட முறையில் ஏற்படுத்தி, மாநிலத்தில் அரசியல் சட்ட முறை செயல் படாத ஒரு தோற்றத்தை ஏற்படுத்தின. அன்றைய மத்திய அரசும் மாநில அரசை பலவீனப்படுத்துவதே, முடக்கு

வதே தமது நோக்கம் என அறிவித்தது. இவைகளெல்லாம் கேரளத்தில் கம்யூனிச மந்திரி சபையைக் கவிழ்ப்பதற்கே செய்யப்பட்டன.

(It was openly declared by some of the leaders of the Ruling party at the centre that their objective was to "Paralyse the administration" of the State. The motive obviously was to create a situation in which the Central Government Could be urged to intervene under Article 356. This objective was gained, "the liberation struggle" Culminating in the proclamation of the president of the 31st July, 1959, under Article 356. Thus it would appear, did the ruling party succced, is getting rid of the communist Ministry in the State—Grave Emergency and Emergency Arising out of the Failure of the Constitutinal Machinery in a State—M. C. Setalvad).

இப்படி பிரிவு. 356 இன்படி ஒரு மாநில அரசைக் கவிழ்க்க மத்திய அரசால் முடியும் என்ற நிலை உள்ளது. அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் இந்தப்பிரிவுகளை சட்டத்தில் ஏற்படுத்த நினைக்கவில்லை. பாகிஸ்தான் பிரிவினையை நினைவில் கொண்டே இந்தப்பிரிவு 356ஐ சட்டத்தில் சேர்த்தனர். ஆனால் மேற்கண்ட எடுத்துக் காட்டுகளின் மூலம் மத்திய அரசினை ஆளுகின்ற கட்சிக்குப் பிடிக்காத, மாறான கருத்துக் கொண்ட கட்சிகளை அழிக்கவே இந்த அதிகாரம் பயன்படுத்தப்பட்டது எனலாம். நெருக்கடி நிலைமை என்ற பெயரால் அவசரக் காலச்சட்டத்தின் துணை கொண்டு எதிர்க் கட்சி மாநில அரசுகளைக் கவிழ்க்க மத்திய அரசினை ஆளும் கட்சிக்குத் துணை போவதற்கே இந்த அவசர காலச் சட்டங்கள் உள்ளன.

(The Government has laid itself open to the justifiable comments that it has on occasions acted in assuring to itself powers under Article 356 not in the interests of the

States or of the Country lent in the interests of theruling party at the centre—Sir. Alladi Krishnaswamy Ayyar lectures—M. C. Setalvad.)

இப்படி மக்களால், நம்பிக்கையுடன், பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசினைக் கவிழ்க்க மத்திய அரசின் இந்த அதிகாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு மாநிலத்தின் ஆளுங்கட்சி, மத்திய அரசினை ஆளுகின்ற கட்சியோடு கருத்து வேறுபாடு கொள்வது ஜனநாயகத்தில் சகஜம். இருவேறுபட்ட தத்துவங்களைக் கொண்டதாகக் கூட இந்த அரசுகள் இருக்கலாம். ஆனால் மக்களின் நம்பிக்கையுள்ள எந்தக் கட்சிக்கும் ஆளும் தகுதி உண்டு. அந்த ஜனநாயக உரிமை மறுக்கப்படும் பொழுது ஜனநாயக நாடு என்ற மதிப்பை அந்நாடு இழந்து விடுகிறது. இந்த நிலையில் இன்றைக்குப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கூறிவரும் ஒரு தத்துவத்தை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். பிரதமர் இந்திரா "மத்திய அரசினை ஆளும் அரசின் கொள்கைளும் மாநில அரசினை ஆளும் கொள்கைகளும் ஒன்றாக இருக்க வேண்டும்"—என்று கூறி வருகிறார். அப்படி என்றால் மத்திய அரசினை ஆளும் காங்கிரஸ் அரசின் கொள்கைகளை, காங்கிரசல்லாத கட்சிகள் ஏற்றுக் கொண்டால் தான் மாநில அரசினை ஆளும் தகுதி உண்டா?

தமிழ் நாட்டினை தி.மு.கழகம் ஆண்டு வருகிறது. மத்திய அரசினை இந்திரா காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பேற்று நடத்துகிறது. எனவே, காங்கிரசின் கொள்கைகளை தி. மு. கழகம் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? இந்திராவின் நோக்கம் காங்கிரஸ் கட்சிதான் மத்திய அரசையும், மாநில அரசுகளையும் ஆள வேண்டும் என்றால் நமக்குத் தடையில்லை. ஏனெனில் ஒவ்வொரு கட்சியும் அரசுப் பொறுப்பேற்க முற்படுவது ஜனநாயகத்தில் உள்ள உரிமை ஆகும். ஆனால், மாறுபட்ட கொள்கைகளைக் கொண்ட மாநில அரசுகளை தங்கள் கொள்கைகளையே பின்பற்றும்படிக் கூறுவது எதிர்க்கட்சிகளை அழிப்பதாகும் என

இந்திரா உணரவேண்டும். இங்கே சிம்சன் தொழிலாளர்கள் தகராறு என்ற பெயரில் கிளர்ச்சிகளை ஏற்படுத்துவது கேரளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நமக்கு நினைவூட்டுகிறது.

அப்படி என்ன அவசியம் இந்தப் பிரிவுகளுக்கு? அரசியல் சட்டத்தின் சர்வாதிகாரம் தான் இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள அவசர காலச் சட்டவிதிகள். (The Indian Constitution provides for constitutional dictatorship in the shape of emergency powers—M. C. Setalvad) நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுவதைத் தவிர்க்க இச்சட்ட விதிகளை ஏற்படுத்தினர். ஆனால் உலக கூட்டாட்சி நாடுகளில் இந்தச் சட்ட விதி இல்லாமலே, அந்நாடுகள் போரினைத் திறம்பட சமாளித்து வருகின்றன.

(However, in the Constitution of Canada, Australia, and the united States, apart from the power to legislate for defence and war there are no express provisions for dealing with emergencies.

Not withstanding the absence of such provisions, these Countries have been able to fight wars successfully by resorting to various measures devised under the war and defence powers—Sir Alladi Krishnaswamy Ayyar Lectures—M. C. Setalvad.)

இத்தகு அவசர காலச் சட்ட விதிகள் மாநில அரசுகளை நசுக்க மத்திய அரசுக்கு ஒரு வாய்ப்பாக உள்ளது. இது கூட்டாட்சிப் பண்புக்கே விரோதமானது. மற்றொன்றும் நாம் கவனிக்கத் தக்கது.

மாநில அரசுகள் பெரும்பான்மை இழந்து அரசியல் சட்டமுறை செயல் படாத போது ஜனாதிபதி 356 பிரிவின்படி மாநில சட்டசபையைக் கலைக்கிறார். ஆனால் மத்திய அரசினை அவ்

வாறு கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை. 1971ம் ஆண்டுக்கு முன்பு காங்கிரஸ் கட்சி இரண்டாக பிளவு பட்ட போது இந்திரா அரசு எந்தத் தனிப் பெரும்பான்மையோடு, பாராளுமன்றத்தில் ஆட்சி புரிந்தது?

தனிப் பெரும்பான்மை இல்லாமல் இருந்த இந்திரா அரசை ஜனாதிபதி ஏன் கலைக்க வில்லை? உள்ளபடியே மாநில அரசுக்கு ஒரு நியாயம், மத்திய அரசுக்கு ஒரு நியாயம் என்ற அரசியல் சட்ட சர்வாதிகாரத்தின் கூட்டு மொத்தத் தொகுப்புத்தான் இந்தியக் கூட்டாட்சியின் அரசியல் சட்டமாகும்.

மேலும் மாநிலத்தின் ஆளுநரின் புகார் இல்லாமலே (report from the Governor) ஜனாதிபதி மாநில சட்டமன்றத்தினையும், அமைச்சரவையினையும், கலைத்து விடலாம். இதற்காகத்தான் பிரிவு—356 இன்—(1) இல்- ‚‘Or otherwise” என்ற சொற்றொடர் சேர்க்கப்பட்டது. H.V. காமத் அவர்கள் இச் சொற்றொடரை சேர்ப்பதை அரசியல் நிர்ணய சபையில் எதிர்த்து “otherwise” is mischievous and diabolic)-என்று கூறினார். பேராசிரியர் சிப்பன் லால் சாக்சேனாவும் இதில் H. V. காமத்தை ஆதரித்தார். ஆளுநர் (Gover nor) தான் பொறுப்பில் உள்ள மாநிலத்தைப் பற்றி நன்கு அறிந்த நிலையில் உள்ளவர். அப்படி இருந்தும் அவர் புகார் கூறாமலே ஏன் மாநில அரசை, மத்திய அரசு கலைக்க வேண்டும்? ஆளுநர், புகார் தான் கூறலாமே தவிர, அவருக்கு வேறு தனி அதிகாரம் கிடையாது. எனவே, அவர் ஜனாதிபதியின் கைப் பொம்மை. அதாவது மத்திய அரசினை நடத்தும் கட்சியின் ஏஜண்டாகும்.

எனவே, இத்தகு அவசர காலச் சட்ட விதிகளை மீண்டும் ஒருமுறை பரிசீலித்து, மாநில அரசுகளை மத்திய அரசு நசுக்காத வண்ணம் தக்க சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும். இந்தச் சட்ட விதிகளால் மத்திய-மாநில உறவு சீர்கேடு அடைவதைத் தவிர வேறு பயன் இல்லை. (No useful purpose is

likely to be served by having a provision in the Constitution which only acts as a sort of irritant in the relations of the States with the centre)

—Rajamannar Committee's Report.

எனவே, அவசர காலச்சட்டங்களில் (Emergency provisions) பிரிவு 356–ம் 357-ம் நீக்கப்படவேண்டும். பிரிவு. 365-ம் நீக்கப்படவேண்டும். பிரிவு. 356-இல் உள்ள " or other wise "— என்ற சொற்றொடர் கட்டாயமாக நீக்கப் படவேண்டும்.

பிரிவு. 352-ல் உள்ள " internal disturbeance" — என்ற சொற்றொடரை விளக்கி, எவ்வாறு உள்நாட்டுத் தொல்லைகள் நாட்டின் பாதுகாப்புக்குகேடு விளைவிக்கிறது என்பதை விளக்க வேண்டும். அவசர கால நெருக்கடிக்கான காரணத் தைத் தெளிவாக விளக்க வேண்டும். அவசரகால நெருக் கடிக்கான காலத்தைத் திட்டவட்டமாக நிர்ணயித்து, நிலைமைக்குத் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

பிரிவு. 352-ம் 354-ம் பிரிவும் வெளியில் இருந்து நாட்டுக்கு ஏற்படும் ஆபத்துக் காலங்களிலேயே பயன் படுத்தப் பெறுதல் வேண்டும்.

பிரிவு-360 நீக்கப்பட வேண்டும். இத்துடன் பிரிவு 268-முதல் 279-வரையுள்ள வரிவிதிப்பு மற்றும் வரிவசூல்முறை களில் மாநில அரசுகளுக்கு நியாயமான உரிமைகள் தரப்பட வேண்டும். மாநில அரசுகளின் வருவாயினை (Revenue) பெருக்கும் வழியினை இவ்விதிகளில் (268-to279) காணவேண்டும்.

பிரிவு. 256-ம்—257-ம் நீக்கப்பட வேண்டும்.

பிரிவு. 256-ன்படி நிர்வாகத்துறையில் மாநிலஅரசின் இயக்கங்களைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரத்தை மத்திய

அரசு பெற்றுள்ளது. மாநில அரசுகள் சுதந்திரமாக இயங்குகின்ற உரிமையைப் பறிப்பதாக இந்தப் பிரிவு உள்ளது. மத்திய அரசுக்குத் தேவையெனத் தோன்றும் முறையில் அதிகாரம் இருப்பது, மாநில அரசுகளின் உரிமைகள் மீது ஆதிக்கம் கொண்டுள்ளதாகவே காணப்படுகிறது.

பிரிவு. 257-ன்படி மாநில அரசுக்கு உள்ள உரிமைகள் மீது மத்திய அரசு ஆதிக்கம் கொண்டுள்ளது. போக்குவரத்து வசதிகளையும், கட்டிடங்கள் கட்டுவதையும் கூட மத்திய அரசு கட்டுப்படுத்த முடியும். தேவையற்ற இந்த ஆதிக்க உணர்ச்சி, மாநிலங்கள் மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவதில் கால தாமதத்தையும், சிரமத்தையும் ஏற்படுத்துகிறது. பிரிவு. 339-ல் — 2-ன்படி மாநில அரசு தாழ்த்தப்பட்டோர் நலவாழ்வுக்கு உரிய திட்டங்களை மேற்கொள்ளும் போதும், அதற்கான திட்டங்கள் தீட்டும் போதும் அதில் தலையிட மத்திய அரசுக்கு உரிமை உண்டு. இதுவும் தேவையற்ற அதிகாரக்குவியலையே காட்டுகிறது.

எனவே, இவைகள்யாவும் நீக்கப்பட வேண்டும்.

பிரிவு–248 (Residuary powers of legislation) மாநில அரசுகள் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும். இந்த எச்ச அதிகாரங்கள் உலகில் உள்ள எல்லாக் கூட்டாட்சி நாடுகளின் அரசியல் சட்டத்திலும் மாநில அரசுகள் பட்டியலிலேயே உள்ளது. எனவே இந்தியக் கூட்டாட்சி உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தைப் பெற இந்த 248-ஆம் பிரிவு மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு சில பிரிவுகளை நீக்கியும், மாறுதல் செய்தும் அரசியல் சட்டத்திருத்தங்கள் செய்ய வேண்டும். அப்பொழுது தான் மத்திய மாநில உறவுகள் சீர்கேடு அடையாமல் இருக்கும். உறவுகள் சீராக இருப்பதற்காக இத்தகு மாற்றங்களை மட்டும் செய்வதால் பலனில்லை.

மத்திய—மாநிலக்குழு (Inters-state council) ஒன்றினை ஏற்படுத்த வேண்டும். பிரதமர் அதன் தலைவராகவும் மாநில அரசுகளின் முதலமைச்சர்கள் உறுப்பினராகவும் இருக்க வேண்டும். மாநில உறவுகளில் சீர்கேடு அடையும் போதும், மத்திய—மாநில உறவுகளில் சீர்கேடுகள் ஏற்படும் பொழுதும் இந்தக்குழு அதனை ஆராய்ந்து தீர்ப்பளிக்க வேண்டும். மத்தியஅரசு ஜனாதிபதி மூலம் அவசரகாலச்சட்டத்தினை பிரகடனம் செய்யுமுன் இக்குழுவினைக் கலந்து தகுந்த நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். ஆளுநர்கள் மாநில அரசுகளில் நிர்வாக ஒழுங்கு சீர்கெட்டு அவசர நிலைப்பிரகடனம் செய்ய வேண்டி ஜனாதிபதியினைக் கோருவதற்கு அனுப்பும் புகார்கள் இக்குழுவின் முன்பு பரிசீலனைக்குவைக்கப்படவேண்டும்.

ஆளுநர்கள் ஜனாதிபதியின் கைப்பொம்மைகளாக, மத்திய அரசின் ஏஜண்டாகப் பணியாற்றுமல், தாங்கள் பொறுப்பேற்றுள்ள மாநில மக்களின் உரிமைகளைக் காக்க வேண்டும். அப்போதுதான் ஜனநாயகப் பண்புகள் தழைத்து, நாகரிகமான அரசியல் முறைகள் வளரும். எனவே, ஆளுநர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்பு அந்த மாநில அமைச்சரவையின் கருத்தை அறிந்து அதன்படி நடக்க வேண்டும்.

ஆளுநர்கள் மத்திய அரசினை ஆளுகின்ற கட்சியில் பணியாற்றிய ஒரே தகுதியின் காரணமாக இல்லாமல், நியமிக்கப்படுகின்ற மாநில மக்களின் மீது பற்றுள்ளவராக இருக்குமாறு "நியமனம்" செய்யப்பட வேண்டும். மாநில அமைச்சரவை தவறு செய்யும் பொழுது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்,

இவைகள் மட்டும் போதாது, மாநிலஅரசுகள் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தகுந்த அதிகாரங்கள் பெற்றாலும், அவைகளை நிறைவேற்ற திட்டங்கள் தேவை. எனவே, ஒவ்வொரு மாநில அரசுக்கும் தனித்தனியாக திட்டக்குழு தேவையாகும்.

இன்றைக்கு உள்ள திட்டக்குழு (planning commission) அரசியல் சட்ட அமைப்பு அல்ல. அரசியல் சட்டம் கூறுகின்ற அமைப்பு நிதி ஆணைக்குழுவே (Finance commission) ஆகும். மத்தியஅரசு மாநிலஅரசுகளைக் கட்டுப்படுத்தவே இத்திட்டக்குழுவினைப் பயன் படுத்திவருகிறது.

(The Planning Commission Constituted in India functi-oned in violation of the provisions of the Constitution.

That is possible because the same party was in power in the Centre and the states. It had grown in prestige by its intimate Connection with important Cabinet ministers of the centre and by its control of the the nation's economy. Over the years it has developed into a super Cabinet. The Centre through the planning Commission Controlled not only the state sector of the plan but also their implementa-tion.

—The Indian federation - K. Subba Rao)

திட்டக்குழு அரசியல் அமைப்புக்கு உட்படாமலேயே இன்றைக்கு நாட்டின் மிகஉயர்ந்த அதிகாரபீடமாக உருப்பெற்று விட்டது. ஒருகாலத்தில் அரசுக்கு ஆலோசனை கூற அமைக்கப்பட்ட இந்தஅமைப்பு பின்னால் அமைச்சரவை மீதே ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு வளர்ந்து விட்டது. நேரு அவர்கள் திட்டக்குழுவின் போக்கினை வெறுத்து விமர்சித்துள்ளார். திட்டக்குழுவில் ஒரவஞ்சனைப்

போக்கும், மாற்றுந்தாய் மனப்பான்மையும் நிரம்பியுள்ளமையே திட்டங்கள் தோல்வியுறக் காரணமாக உள்ளது. நல்ல பயன் தரும் திட்டங்கள் உரிய மதிப்பினைப் பெறாமல் பிரதேச முக்கியத்துவம் உள்ள திட்டங்களே செயல் படுத்தப் படுவதால் நாட்டின் செல்வம் பாழாகிறது.

வறுமையுற்ற பகுதிகள் மேலும் புறக்கணிக்கப்படுகின்றன. வளம்கொழிக்கும் பகுதிகள் மேலும் வளம் பெறுகின்றன. எனவே செல்வக் குவியல் ஏற்படுகிறது. திட்டங்களின் பயன் சமுதாயத்தின் அடித்தளத்தை அடையாமல் மேல் மட்டத்திலேயே குவிக்கப்படுகின்றன. இதனால் ஏழை மேலும் ஏழையாகவும், பணக்காரன் மேலும் பணக்காரனாகவும் ஆகிற ஏற்றத்தாழ்வு முறை ஏற்படுகிறது.

எனவே, இப்பொழுதுள்ள திட்டக் குழுவினை மாற்றியமைக்க வேண்டும். திட்டக்குழுவில் நிபுணர்களே இடம் பெறவேண்டும். மத்திய அமைச்சர்கள் எவரும் இடம் பெறக் கூடாது. மாநில அரசுகளின் திட்டங்களை வெட்டுகின்ற அதிகாரம் திட்டக் குழுவினிடம் இருக்கக்கூடாது. மாநில திட்டக் குழுக்களுக்கு ஆலோசனை கூறும் அமைப்பாக இருக்க வேண்டும்.

அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள நிதி ஆணைக்குழுவுக்கு உரிய அதிகாரங்கள் இருக்க வேண்டும். மாநிலங்களுக்குரிய உதவித்தொகைகள், நிதிப்பங்கீடுகள், திட்டச்செலவுகள், முதலீடுகள் இவற்றில் சமநோக்கு இருக்க வேண்டும். நிதி ஆணைக்குழு மாநிலங்கள் அனைத்தையும் சமமாகப் பாவிக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

மாநில அரசுகள் தங்களுக்குரிய வருவாயினைப் பெருக்கும் திட்டங்கள் தீட்டவும், தங்கள் மாநிலத்தில் தொழில்களுக்கு அனுமதி வழங்கவும் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும். அன்னியச் செலவாணி தரும் மூலப் பொருட்கள் மாநிலத்தில்

இருந்தால், அந்தஅன்னியச் செலவாணி அந்தமாநில நலனுக்குப் பெரும்பாலும் பயன்படுத்தப்பட வேண்டும். எஞ்சியவை மத்திய அரசுநிதி ஆணைக்குழுவினிடம் சேர வேண்டும்.

அரசியல் சட்டப் பிரச்னைகள், மாநிலங்களிடையே ஏற்படும் தகராறுகள், அடிப்படை உரிமைகள் ஆகிய இவைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையே தலைமை நீதிமன்றம் ஆராய வேண்டும். மற்ற வழக்குகள் உயர் நீதி மன்றத்திற்குள் அடங்கவேண்டும். நீதிபதிகள் நியமனத்தில் தகுந்த மாநிலப் பிரதிநிதித்துவம் வேண்டும்.

நாடாளு மன்றத்தில் பிரதிநிதித்துவம் ஜனத்தொகை அடிப்படையில் இல்லாமல், மாநில அடிப்படையில் இருக்க வேண்டும். அப்பொழுது தான் மாநிலங்களிடையே ஆதிக்க உணர்வு இருக்காது. ராஜ்யசபையில் உறுப்பினர்எண்ணிக்கை எல்லா மாநிலங்களுக்கும் அமெரிக்க செனட்டைப் போல சமமாக இருக்க வேண்டும். இதற்கு பிரதிநிதித்துவ முறை இருந்தாலேயேஇந்தியக்கூட்டாட்சி, கூட்டாட்சியின் உண்மையான பண்பைப் பெறமுடியும். மக்கள் தொகை வேறு, மாநில அமைப்புகள் வேறு. மக்கள்தொகை காலத்தால் மாறுபடலாம். செயல் முறைகளால் கட்டுப்படுத்தப்படலாம். ஆனால் மாநிலம் என்பது ஒரு தனித்த பண்பு நிறைந்த தேசிய இனத்தின் அமைப்பு என்பதனை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

மொழி வழி அமைந்த பல்வேறு தேசிய இனங்களின் தொகுப்பே இந்தியக் கூட்டாட்சி ஆகும், எனவே, பிரதித்துவம் சமமாக இருந்தாலேயே, எல்லா மாநிலங்களும் சமம் என்று கொள்ளப்படும்.

எனவே, எல்லா மொழிகளும் சமமாகப் பாவிக்கப்படவேண்டும். இணைப்பு மொழி ஆங்கிலமாகவே இருக்க வேண்டும். இந்திக்கு ஆட்சிமொழித் தகுதி இல்லை. நீதி

மன்றங்கள் எல்லாம் ஆங்கிலத்திலேயே நடைபெறவேண்டும். கட்டாய இந்திமொழித் திணிப்பு இந்திய ஒற்றுமைக்கே உலை வைத்து விடும்.

இவைகளுக் கொப்ப பிரிவு.343 நீக்கப்பட வேண்டும். பிரிவு. 344ல்6-ஐ நீக்க வேண்டும். இந்தி மொழி வளர்ச்சியை மட்டுமே கருதுகின்ற பிரிவு. 351ஐ நீக்க வேண்டும். மாறாக கலப்புக் கலாச்சாரம் (composite culture) கொண்ட இந்தியாவை இந்தி மொழி ஆளமுடியாமல் செய்ய வேண்டும். எல்லா இந்திய மொழிகளும் சமம். பயிற்றுமொழிக்கு தாய் மொழியையே பயன்படுத்த வேண்டும்.

மாநில வடிவினையும், உருவினையும், பெயரையும் அந்தந்த மாநில மக்களின் விருப்பத்திற்கு மாறாக மாற்றம் செய்யக் கூடாது. அவைகள் வரலாற்றுப் பின்னணியும், பண்பாட்டுச் சிறப்பும் கொண்டவை. ஆதலால், மாற்றங்கள் தேவை எனக் கருதினால் அந்தந்த மாநில மக்களின் கருத்தை அறிந்தே அத் தகு மாற்றங்களை நிறைவேற்ற வேண்டும். எனவே, பிரிவு-3-ஐ இதற்குத் தகுந்தவாறு மாற்றியமைக்க வேண்டும். இங்ஙனம் மாநில சுயாட்சிக்கு வழிகாணும் வகையில் அரசியல் சட்டப் பிரிவுகளை புதிய கண்ணோட்டத்தில் மாற்ற வேண்டும்.

முடிவுரை

மாநில சுயாட்சியினைப் பெறுகின்ற வழி முறைகள் மிகச் சிக்கலானவையுமல்ல; மிகப் போராடிப் பெறவேண்டிய ஒன்றும் அல்ல. மத்தியில் குவிந்துள்ள அதிகாரங்கள் பரவலாக்கப் பெறல் வேண்டும். அதன் மூலம் மாநில அரசுகள் தங்களுடைய திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான அதிகாரங்களைப் பெறல் வேண்டும். மத்திய அரசினை நடத்துபவர்களும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றுள்ள மொழி ஆதிக்க உணர்வுள்ளவர்களும், பிற மொழிக் காரர்களை அடிமைப்படுத்த எண்ணாமல் மாநில அரசுகள்

இந்தியக் கூட்டாட்சியில் பங்கு கொண்டுள்ள நோக்கத்தினை மதிப்பார்களேயானால் மாநில சுயாட்சிக் கோரிக்கை மிகச் சுலபமாகத் தீர்க்கப்பட்டுவிடும்.

அப்படி மத்திய அரசு மாநில அரசுகளின் உரிமை வேட்கையினை மதிக்கத் தவறினால் மாநில சுயாட்சிக் கோரிக்கை போராடிப் பெறவேண்டிய ஒன்றாகி விடும். இதயத்தை இரும்புக் கம்பிகளாக்கிக்கொண்டு எண்ணற்ற இளைஞர்கள் போராட வேண்டி வரும்! துப்பாக்கிக் குண்டுகளைத் துச்சமாகக் கருதி எழுச்சி கொண்டு எழவேண்டி நேரிடலாம்! பச்சை ரத்தம் பாய்ந்தோடக் கச்சை கட்டிக் காளையர்கள் களம் செல்ல வேண்டாம்; இச்சையுடன் இனிதாகத் தருகின்றோம் மாநிலத்தில் சுயாட்சி உரிமையினை என்றால், சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டியதில்லை; சித்திரவதை ஏற்க வேண்டியதில்லை; போராடாமலே பெற்றிடலாம் மாநில சுயாட்சிதனை! கலைஞர் அவர்கள் கூறுவது போல "சுயாட்சி தரும் நல்லவர்கள் அங்கே உள்ளனர், பெற்றிடும் வல்லவர்கள் இங்கே உள்ளனர்" —என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

கோரிக்கைகள் கோஷங்களாகவும், முயற்சிகள் முழக்கங்களாகவும் மாறவேண்டியதில்லை.

தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற நிலையினையே எதிர்பார்க்கிறோம். இன்னொரு பாகிஸ்தானாக திராவிட நாடும், இன்னொரு கிழக்கு வங்கமாக இந்தியாவின் பகுதிகளும் மாறாமல் இருக்க வேண்டுமானால் மாநிலங்கள் சுயாட்சி பெறுவது அவசியமாகும்.

குட்டக் குட்டக் குனிகின்ற கோழைகள் அல்ல மாநிலங்கள்; குனிந்து கொண்டே இருப்பதால் குட்டிக் கொண்டே இருக்கின்ற முட்டாளாக மத்திய அரசு இருக்கக் கூடாது என்றுதான் நாம் கோரி வருகிறோம். இந்தியாவின் எந்தப் பகுதியினர் இப் போராட்டத்தில் ஈடுபட்டாலும் சரியே; இது நாடுதழுவிய, இந்திய மாநில அரசுகள் அனைத்திற்கும் பொதுவான பிரச்சினையே என்பது தெளிவாகும். இருண்ட இந்தியாவில் மருண்டு வாழும் மக்களுக்கு உதயசூரியனின் ஒளிக்கிரணங்கள் ஒரு புதிய பாதையைக் காட்டும்!